உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-எ] கீலக௵ மாசி மீ. [பகுதி-௪.

## பழையபுலவரின் பெருந்தன்மைகள்.

சங்கநாளில் விளங்கிய புலவர்கள் பாடல்களை ஆராய்ந்தால், அநேககற்பனைகள் கருத்துக்கள் சரித்திரங்கள் முதலியவை தெரியவருதல் போலவே, அந்தப் புலவர்களது அருஞ்செயல்கள் பெருந்தன்மைகள் பலவும் விளங்குகின்றன. அக்குணங்களும் செயல்களும் அவர்களுக்குப்பின்னிருந்த புலவர்களிடம் ஏகதேசமாகவேயிருந்தனவென்பதில் ஐயமில்லை. விரிந்தசிந்தனையும், பரிந்துருகும் தயாளமும், அற்புதமான செல்வாக்கும், அரசர்க்கு நடுநிலை தவறாது இடித்துரைக்கும் வன்மையும், உறுதிதவறாமையும் அன்னோரிடம் மிகுந்துவிளங்கின. பிற்காலங்களில், வித்வான்கள்பலர் தரித்திரமிகுதியால், மேற்காட்டிய குணஞ்செயல்களில் ஒரோவழித் தவறியிருக்கக்கூடுமாயினும், "வறுமையிற்செம்மை" என்பது முற்காலத்துப்புலவரிடஞ் சிறிதுங் குறைந்ததில்லையெனலாம். இவற்றுக்கு, எத்தனையோ திருஷ்டாந்தங்களைப் பழையநூல்களிலிருந்து நாம் காட்டக்கூடும். ஆயினும் நாமெல்லாம் என்றும் ஞாபகத்தில் வைக்கத்தக்கவண்ணம் விளங்கிய அவர்களது பெருந்தன்மைகள்சிலவற்றை இப்பத்திரிகையில் ஓரிடத்துக்காட்ட விரும்பி இவ்வியாசமெழுதலாயினேன்.

புறநானூற்றில்வரும் புலவர்களிலே, கோவூர்கிழார் என்னும் பெருந்தகையை மேற்கூறியகுணஞ்செயலுடைமைக்குத் தக்க திருஷ்டாந்தமாகக் கூறலாம். ஒருகுடிப்பிறந்த சோழவரசர்களாகிய

நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்பவர், சோணாட்டை அரசாளுமுரிமை தங்கள்தங்களுக்கு உரியதென்று வழக்கிட்டு அது தீராமல் பலவிடங்களிலும் பெரும்போர் புரிந்தார்கள். அவருள் நெடுங்கிள்ளி, சோழநாட்டைத் தன்கைவசப்படுத்தி ஆண்டுவந்தமையால், அவனுடன் பகைத்த நலங்கிள்ளியே தனக்குரிய பாகத்தைப்பெறுதற்கு நெடுங்கிள்ளியின் அரண்களைக் கைப்படுத்தவேண்டியதாயிற்று. அவ்வாறே, அவன் நெடுங்கிள்ளியால் உள்ளிருந்து காக்கப்பட்ட ஆவூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். இம்முற்றுகை பலநாளாக நிகழ்ந்தமையால் கோட்டைக்குள்ளிருந்த பிராணிகளுக்கு நேர்ந்த பெருந்துன்பங்களைக் கண்டுபொறுக்காது, இக்கோவூர்கிழார் என்னும் பெருந்தகை, கோட்டையை அடைத்துக்கொண்டிருந்த நெடுங்கிள்ளியிடம் நேரிற்சென்று "அரசே! யானைகளெல்லாம் குளியாமலும், நெற்கவளமுதலியவற்றைப்பெறுமலும், நிலத்தின்மேற் புரளுங்கைகளையுடையனவாய்ப் பெருமூச்சுவிட்டு இடிபோல முழங்கவும், பாலில்லாமல் குழந்தைகள் அழவும், மகளிர் தம்மை அலங்கரியாமலிருக்கவும், குடிகளெல்லாம் வருந்திக்கூப்பிடும் கூப்பீட்டைக்கேட்கவும் இவற்றிற்கெல்லாம் நாணுமல் இவ்விடத்து நீ இனிதாகவிருத்தல் கொடியது. நீ தருமமுடையவனுனால், (உன் ஞாதியாகிய எதிரிமுன்) இக்கோட்டை உன்னதல்லவா? என்று சொல்லித் திறத்தல்செய்வாயாக. அன்றி, வீரமுடையவனுனால், யுத்தஞ்செய்து திறந்துவிடுவாயாக. இரண்டுமின்றித் திறவாமலடைக்கப்பட்ட கோட்டையில் ஒருபக்கத்தே நீயொதுங்கியிருத்தல், ஆராயுமிடத்து, மிகவும் நாணுந்தன்மையுடையது" என்னுங் கருத்துப்படக்கூறி அவனைத் திறக்கச்செய்தனர். இதனை:—

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தலை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவு
மின்னு தம்ம வீங்கினி திருத்த

றுன்னருந் துப்பின் வயமான் ரேன்ற
லறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
ஞணுத்தக வுடைத்திது காணுங் காலே." (சச)

என்பதனாலறிக. இப்பாடலால், ஜனங்கள் நெடுநாளாக அரச ரிருவரது தன்னயத்தால் வருந்துதல் கண்டு, அரசனிடஞ்சென்று அவனிரங்கும்படி கூறிய இக்கோவூர் கிழார் உயிர்கள்பாற்கொண் டிருந்த கருணையும் உண்மைகூறி அரசர்க்கிடித்துரைக்கும் மன வுறுதியும் பெற்றிருந்தமை விளங்கும். இப்பெரியாரது பெருந் தகைமைகளை விளக்கும் அற்புதமான செயல்கள் வேறு சிலவு முள்ளன. மேற்குறித்த நலங்கிள்ளி நெடுங்கிள்ளிகளிருவரும் உறை யூர்க் கோட்டையில் முற்கூறியபடியே முற்றுகையிட்டும் அடை த்தும் நிற்க, ஒருகுடிப்பிறந்த இவர்களது செற்றமிகுதியைக்கண்டு இப்புலவர் சிறிதும்பொறாமல், அவ்விருவரிடமுஞ்சென்று, "அரசர் களே! (பகைத்துநிற்கும் உம்மிருவருள் ஒருவனும்) பெரிய பனையின் வெண்மையான இதழைச் சூடினவனல்லன். (சேரனல் லனென்றபடி) அல்லது கரியகொம்புகளையுடைய வேப்பமாலையையு டையவனல்லன். (பாண்டியனல்லன்) உன்னுடைய மாலையும் ஆத்தி யாற் கட்டப்பட்டது; உன்னுடன் பொருவோனுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது. ஆதலால், உங்களுள் எவர் தோற்றா லும் தோற்பது உங்கள் குடியேயன்றி வேறன்று; இருவரும் வெ ல்லுதலென்பதோ இயற்கையில்லை; இவற்றால் உங்கள் செய்கை குடியின் பெருமைக்குச் சிறிதுந்தக்கதே அன்று; (அன்றியும்) உங் களைப்போலும் பெருவேந்தர்க்கு, இந்தயுத்தம், உடம்பு பூரிக்கும் சந்தோஷத்தைச் செய்யும். ஆதலால் இப்போரை இனிவிட்டொ ழியுங்கள்" என்னும் பொருள்பட:—

"இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே

ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே. (சஙு)

என்னும் பாடலைக் கூறினர். பழைய நாளில், தமிழ்ப்புலவர்களுக்கிருந்த விரிந்தசிந்தையை விளக்குதற்கு இத்திருஷ்டாந்தத்தைக் காட்டிலும் வேறு சிறந்த சான்றும் வேண்டுமோ? கோவூர்கிழார் ஒருகுடியிற் பிறந்து கலகமிட்டுக்கொண்டிருந்த இருவரையும் நோக்கி, "யுத்தஞ்செய்கிற நீங்கள் வேற்றரசர்களன்றி ஒருகுடியிற்பிறந்தவர்களன்றோ. உங்களில் யாராவதொருவர் தோற்றாலும் ஒருவர் ஜயித்தாலும் உமது குடி ஒருதலையாகக் கெடுமேயல்லாது, வேறில்லை. இருவரும் வென்று குடியை உயர்த்துவதென்பது உங்கள் யுத்தத்திலில்லை" என்றுகூறி, அவர்கட்குவருங்கெடுதியைப் பசுமரத்தாணிபோற் பதியக்கூறியிருக்கும் அழகு எவ்வளவு அற்புதமாயிருக்கிறது. இக்காலத்தில் நம்மவரநேகர் கெட்டொழிதற்கு இது போன்ற கலகங்களே ஏதுவாயினும் அதனை நீக்கிவைக்க முயலும் பெரியார் அரியர். முற்காலத்தில் கோவூர் கிழார்போன்ற பெருந்தகைகள் பலர் அரசருக்குள்விளைந்த மிக்கபகைமைகளை நீக்கி ஒற்றுமையும் சமாதானமுஞ் செய்துவைக்க சமயம்நேர்ந்தபோதெல்லாம் பெரும்பாடுபட்டிருக்கிறார்கள். இதற்கு மற்றொரு அரிய பிரமாணமுங் காட்டுவோம்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் பெருமான், பெருவழுதி என்னும் பாண்டியனும் பெருந்திருமாவளவனென்ற சோழனும் ஓரிடத்துச்சேர்ந்து மிக்கநட்போடு களித்திருந்தபொழுது அவர்கள் சேர்க்கையைக்கண்டு பெரிதுமகிழ்ந்து, அவ்வரசிருவரையும் தனித்தனிபார்த்து "நீ, காவிரிநாட்டுக்குத் தலைவன்; இவன், மிகுந்த பழைமைவாய்ந்த ஆலமரத்தை அதன் விழ் தாங்கிக்காப்பதுபோலத் தன் பழங்குடியைத்தாங்கி பகைவரஞ்சவாழும் பாண்டியரேறுபோல்வான்; நீ, உறந்தைநகர்க்கு அரசன்; இவன் தமிழ்வளமிகுந்த மதுரைவேந்தன். நீவிரிருவரும் பலராமனும் கண்ணபிரானும்போலச் சேர்ந்துவிளங்குகின்ற இக்காட்சியி

னும் இனியபொருள் வேறுண்டோ? கேளுங்கள்; உங்கள் புகழ் நெடுங்காலம் வாழ்வதாக. உம்மில் ஒருவர் ஒருவர்க்கு உரியபோ தெல்லாம் உதவிசெய்வீர்களாக. நீங்களிருவரும் கூடிநிற்பதினின் றும் வேறுபடாமலிருந்தால், வளமிகுந்த இவ்வுலகம் உங்கள் கைய கப்படுவது பொய்யாகாது. ஆதலால், நல்லவைபோலவும், நியாய முடையவைபோலவும், முன்னோர்கள் ஒழுகிய ஒழுக்கம்போலவும் (சோழபாண்டியர்க்குள்ள நீண்டபகைமையை எடுத்துக்காட்டியும் என்றபடி) அன்புடன்வாழும் உங்கள் மத்தியில் நுழைந்து உங்க ளைப்பிரித்தற்குத் திரிந்துழல்கின்ற அந்நியருடைய சிறப்பில்லாத வார்த்தைகளைக்கேளாமல், உங்களுடைய கூட்டம், இன்றுபோல என்றும் விளங்குவதாக. இருவருஞ்சேர்ந்து வெற்றிகளைப்பெறுக. பகைவருடைய குன்றையுடைய நாடுகள், புலிமுத்திரையுடன் மீன முத்திரையும் பொறித்த சிகரங்களை உடையனவாகுக" என்னுங் கருத்துப்பட அற்புதமாக அவ்விருவரையும் வாழ்த்தினர். இதனை:-

"நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
முழுமுத லருலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
யிளைய தாயினுங் கிளையரா வெறியு
மருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே, நீயே
யறந்துஞ் சுறந்தைப் பொருநனை யிவனே
நெல்லு நீரு மெல்லார்க்கு மெளிய
வரைய சாந்தமுந் திரைய முத்தமு
மிமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே
பானிற வுருவிற் பனைக்கொடி யோனு
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமோ டுருவா விளங்கி
யின்னீ ராகலி னினியவு முளவோ
வின்னுங் கேண்மினும் மிசைவா ழியவே
யொருவீ ரொருவீர்க் காற்றுதி ரிருவீரு

முடனிலை திரியி னாயி னிமிழ்திரைப்
பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலங்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால், நல்ல போலவு நயவ போலவுந்
தொல்லோர் சென்ற நெறிய போலவுங்
காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரு
மேதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே." (கூஅ)

என்னும் புறப்பாட்டாலுணர்க. ஈண்டு, காரிக்கண்ணனார், அவ்விருவரையும் அருமையாக அழைக்கும்விதமும், அவ்விருவரதொற்றுமையையும்பற்றி அவர்கூறிய இனியவசனங்களும், அவ்வரசரிருவர் உள்ளத்தினும் அழியாத ஒருநன்மையைச் செய்திருக்குமென்பதில் ஐயமேயில்லை. இப்பெருந்தகையார், சோழன்வாயிற் புலவரென்பது, "காவிரிப்பூம்பட்டினத்து" என்னும் இவரதடையே விளக்கும். இங்ஙனம் இவர் சோழனைச்சேர்ந்த புலவராதலால், அவ்விருவருள் தம்மரசனை விளிக்கும்போது, "நீயே—தண்புனற்காவிரிக் கிழவனை" "நீயே, அறந்துஞ்சுறந்தைப்பொருநனை" என மிகச் சுருக்கமாகவேகூறி, பாண்டியனைப் பலவடிகளாலும் பெருக்கமாகப் புகழ்ந்திருப்பது, ராஜகீயமுறையில் இப்புலவர்க்கிருந்த பழக்கமிகுதியை உணர்த்தவல்லது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், தம்மரசனைக்காட்டிலும், அவனிடம் வந்த வேற்றரசனை அதிகமாகப் புகழ்தலே முறையன்றோ. அந்நியர்கள் உங்களிருவரையும் பிரிக்க உழல்வார்களென்பதை இப்புலவர் குறிக்குமிடத்து, "தொல்லோர் சென்றநெறியபோலவும்" என, "பாண்டியசோழ வமிசங்களுக்கு நீண்ட பகைமையிருந்ததுபோல அயோக்கியர்காட்டும் நியாயங்களைக்கேளாது" என்றுகூறுதல் வியக்கத்தக்கது. இன்னும் இப்பாடலிலுள்ள ரசங்கள் அறிஞர் அறிந்து சுவைத்தற்குரியன.

இனிப், பழையபுலவர்கள், அரசரது அநியாயச்செய்கைகளைக் கண்டால், அவற்றை நீக்க முற்படுவதையும், அங்ஙனம் கொடுமை

செய்த அரசர்களே வமிசபரம்பரையாக இகழ்ந்து விலக்குதலையும் பெருங்கடமையாகக் கொண்டிருந்தார்கள். கோவூர் கிழாரே முற் கூறிய விஷயத்திற்குத் தக்கதிருஷ்டாந்தமாவர். கடையேழுவள்ளல் களில் ஒருவனும், புலவர்க்குப் பரமோபகாரியும், கபிலர் முதலிய நல் லிசை யாளரால் நாவாரமனமாரப்புகழ்ந்து பாடப்பெற்றவனுமான மலையமான் திருமுடிக்காரியிடத்துள்ள பகைமையால், அவன் மக்க ளைப் பிடித்துக் கிள்ளிவளவனென்னுஞ் சோழன் யானையைக்கொ ண்டு கொல்லும்படி செய்யநேர்ந்தபோது, கோவூர்கிழார் அச்செய்தி கேட்டு விரைந்து சென்று:—

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே. (சசு)

என, "அரசே! நீ புறாவொன்றின் துக்கமட்டுமேயன்றி, பிறவும் உயிர்கட்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றையுந் தீர்த்த சோழரது மரபிலுதித்தவன்; இக்குழந்தைகளோ, அறிவாலுழுதுண் ணும் புலவரதுவறுமையைக் கண்டஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாருடைய வமிச த்துதித்தவர்கள். இப்பொழுது இந்தயானையைக்கண்டு, தம்மிளமை யால் இயற்கையில் வெருவியழுகின்ற அழுகையையும் மறந்துநிற் கும் மிகச்சிறுபிள்ளைகள் இவர்கள்; இக்கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து, முன்பு தாங்களறிந்திராத புதியவருத்தமுடையவராயிரு க்கிறார்கள். நான்கூறிய இவ்வார்த்தைகளை நீ உள்ளபடி கேட்டவ னானால், இனி நீ விரும்பியதைச் செய்க." என்று மிகவிரங்கக் கூறி, அக்கொடுமையினின்று அம்மக்களைத் தப்பவைத்தார். என்ன பெருங்கருணை! எத்தகைய செல்வாக்கு! இவ்வாறே, மற்றொரு சமயத்திலும், முற்குறித்த நெடுங்கிள்ளியிடமிருந்து நலங்கிள்ளி பால்வந்த இளந்தத்தன் என்னும் புலவனைப் பிற்கூறிய அரசன்

ஒற்றனாய் வந்தானென்று கொல்லத்தொடங்கியபோது இக்கோவூர் கிழார்,:—

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
யோம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே." (சஎ)

என்னும் பாடலைக்கூறி, அந்நெடுங்கிள்ளியின் கொடிய எண்ணத்தை மாற்றினார். இதன்கருத்து:—வள்ளலாயுள்ளவர்களை நினைத்து, பழுத்தமரங்களை நோக்கிச் செல்லும் பறவைபோலச் சென்று, கடத்தற்கரிய வழிகளையெல்லாம் தூரமென்றுகருதாமற் கடந்து, திருந்தாத நாவால் தம்மாற்கூடியபடி பாடி, அங்கேபெற்ற சம்மானத்தால் மகிழ்ந்து தம் சுற்றத்தை உண்பித்தும் தாமும்பொருளைப் பாதுகாவாமல் உண்டும், உண்மகிழ்ச்சியுடன் பிறர்க்குக் கொடுத்தும் தம்மை ரக்ஷிக்குஞ்செல்வரால் பெறுஞ்சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலான் வாழும்வாழ்க்கை பிறர்க்குக் கொடுமைசெய்தலை அறிந்ததோ? இல்லை. இவ்வாழ்க்கை, தம்மொடு எதிர்த்தோரைக் கல்வியால் வென்று அதனால் செருக்குதலுடையதேயன்றி, உங்களைப்போன்ற அரசருடைய பெருமையுமுடைத்து என்பது.

இன்னும் சோழன் செங்கணானும் சேரமான்கணைக்காலிரும்பொறையும் நடத்திய பெரும்போரில், சேரனைப்பிடித்துச் சோழன் சிறைவைத்தபோது, பொய்கையார் என்னும் புலவர்பெருந்தகை "களவழிநாற்பது" பாடிச்சேரனைச் சிறைமீட்டவரலாறும், குமணவள்ளலை நாட்டைவிட்டுக் காட்டில் துரத்திய இளங்குமணனது செற்றத்தைப் பெருஞ்சித்திரனார் நீக்கி அவ்விருவரையும் முன்போல வாழவைத்த வரலாறும் பிரசித்தமானவை.

இனி, அரசர்களிடத்துப் பெருங்குற்றமொன்று கண்டால், முற்காலத்துப் புலவர்கள், அக்குற்றத்தை வமிசபரம்பரையாக மறவாமல் அதனையியற்றிய குலத்தை இழித்துவரும் வழக்கமுடையராயிருந்தாரென்பதும் பழையவாக்கால் அறியலாம். இதற்கு ஓர் அழகிய சரித்திரமுண்டு. இளங்கண்டீரக்கோ என்பவனும், இளவிச்சிக்கோ என்பவனும் ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது சென்ற பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர், முன்னவனைத்தழுவி மரியாதைசெய்து, பின்னவனாகிய இளவிச்சிக்கோவை அங்ஙனம் மரியாதைசெய்யாமலிருந்தபோது, "என்னை நீர் தழுவாமைக்குக் காரணமென்னை ?" என அவ்விச்சிக்கோ புலவரை உசாவினன். அதற்குப் புலவர் "சிறந்த மலைப்பக்கத்தில் தம் கணவர் நெடுந்தூரத்திற்சென்றாலும், அவர் பெண்டிரும் தம் தரத்திலேநின்று, பாடும் புலவர்கள்விரும்ப, யானைக்கொடையளிக்கும் பெரும்புகழுடைய கண்டீரக்கோன் இவனாதலால் தழுவினேன் ; நீயும், நன்னன் குலத்துதித்த பெருமையும் இயற்கை நற்குணங்களுமுடையவனாயினும் நின் முன்னோனொருவன் புலவர்கட்கு வாயிற்கதவடைத்த கொடுஞ்செயல்பற்றி உங்கள்மலையை எம்மவர் பாடுதலொழிந்தார்—அதுபற்றித் தழுவ இசைந்திலேன் என்னுங்கருத்துடன்.—

> " பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
> விண்டோய் சிமைய விறல்வரைக் கவாற்
> கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
> புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
> பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
> கண்டீ ரக்கோ னாகலி னன்று
> முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
> நன்னன் மருக னன்றியு நீயு
> முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
> பாடுநர்க் கடைத்த கதவி னுடுமலை
> யணங்குசா லடுக்கம் பொழியுநும்
> மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே." (கரு௧)

என்னும் பாடலைக்கூறினர். இவர் கூறியவாறு, புலவர்க்கு வாயிற்கதவடைத்தவன் நன்னன் என்பவனாகவேண்டும். இவன் இத்தவறேயன்றி, புலவர்களும் பிறரும் இவன்பெயரைக் கேட்டாற் காதை

*

ப்பொத்திக்கொள்ளத்தக்க பெரும்பழியொன்றையும் புரிந்தான். அஃதாவது, தான் தின்னுதற்கென்று இவனது சோலையில் வளர்க்கப்பட்ட மாவின்கனியொன்று, ஆற்றில் ஒதுங்கக்கண்டு அதனை எடுத்துத்தின்ற பெண்ணொருத்தியை, அக்குற்றத்துக்காகக் கொல்லுவித்தனன். அவளைக் கொல்லாதிருக்கவேண்டி அக-யானைகளும் அவ்வளவினதான பொற்பாவையுந் தருவதாக அவள்சுற்றத்தார் எவ்வளவோ கூறினும் அதனை அவன் கேட்கவில்லை. இவ்வநியாயச்செய்கையை, பழையபுலவர்கள் பெரும்பழிக்கெல்லாம் ஓர் உதாரணமாகக்காட்டுதல் வழக்கமாயிருந்தது. இதனை,—

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை."

எனப் பரணர் கூறுதலால் அறிக. (குறுந்தொகை. உகஉ.)

பழைய புலவர்களது உயர்ந்த காம்பீரியமும் உண்மைச்சத்தியமும் உறுதியினின்று விலகாமையும் கீழ் செய்திகளால் நன்குவிளங்கும். புலவர்களது அருமைபெருமைகளையறிந்து தவறாமல் ஆதரிக்கவல்ல கருணைத்தமிழ் வள்ளல்கள்பலர் அக்காலத்திருந்த செருக்காலன்றோ இவ்வாறு முற்காலத்துக் கவிகள் விளங்குவாராயினர். இன்னும் ஒரு சிறந்த திருஷ்டாந்தம் இதற்குண்டு. வெளிமான் என்னும் சிற்றரசனிடம் பரிசிற்குச்சென்ற பெருஞ்சித்திரனார் என்பவர்க்கு அவ்வரசன் ஏதோசிறிது கொடுக்க, அதனை அப்புலவர் ஏற்காமல் சினத்துடன்சென்று, குமணவள்ளலையடைந்து அவனால் யானைப்பரிசில் பெற்றுக்கொண்டு, தன்னை அவமரியாதைசெய்த வெளிமானூர்க்குவந்து அங்குள்ள காவல்மரமொன்றில் தம்பரிசில் யானையைக்கட்டி, அவ்வெளிமானிடம் நேரிற்சென்று,—

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்

கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல்! செல்வல் யானே. (கசுஉ)

என்ற பாடலால், "இரப்போர்க்குக் கொடுத்துப் பாதுகாப்பவன் நீயொருவனேயல்லன்; ரக்ஷிப்பவர்கள் யாசிப்பவர்க்கு இல்லாமற் போகவுமில்லை. இனி, யாசிப்பவரிருத்தலையும் பார்! அவர்க்கு ஈவோ ரிருப்பதையும்பார்! உன் ஊரில் காவலையுடைய மரம்வருந்தும்படி யாம் கொண்டுவந்துகட்டிய உயர்ந்த நல்லிலக்கணமமைந்த யானை எமது பரிசில். விரைவான கதிபொருந்திய குதிரைகளுடைய தலை வனே! இனி நான் செல்வேன்." என்னும் பொருள்படக் கூறிச் சென்றார். இதனிலும் புலவர்க்கு அக்காலத்திருந்த பெருஞ்செல் வாக்குக்கு வேறுசான்று வேண்டாஎன்பது திண்ணம். அக்கால த்துப் புலவர், அரசர்க்குரிய யானைதேர் முதலிய வரிசைகள் பெறு தலும் வழக்கம்.

இனிப் புலவர்கள், தம்புலமையைக் காட்டிப்பெறும் சம்மான ங்களால் மகிழ்வரேயன்றி வெறும் யாசகமாகப்பெறும் பரிசில்களைப் பெரிதும் வெறுப்பர். இதற்குப் பல திருஷ்டாந்தங்கள் புறநானூ ற்றிற் காணலாம். ஆயினும், ஒன்றுகாட்டுவேன். பெருஞ்சித்திர னார் என்ற புலவர், அதிகமான் நெடுமானஞ்சியிடஞ்சென்று பரி சிற்காகப் பலநாட் காத்திருக்க, அப்புலவரது அருமைபெருமைகளை நேரிற்கண்டு களியாமலே, அவ்வரசன் ஏவலாளர்மூலம் சிலபொரு ளைப்பரிசிலாகக் கொடுத்தனுப்பியபோது, அதனைப் புலவர் பெற்றுக் கொள்ளாமல், "பரிசில்பெறும்பொருட்டுக் குன்றுமலையுங்கடந்து வந்தேன் எனச்சொல்லியனுப்பிய என்னிடம், அன்புகொண்டு "இப் பொருளைக்கொண்டு இவ்வாறுபோகுக" என்று விடுப்பதற்கு என் னை எத்தன்மையனாக அறிந்தான், அரசன்; என்னை அழைத்துவரச் சொல்லிக் காணாமலேதந்த இந்தப்பொருளைக் கொள்ளுதற்கு, யான் ஓரிலாபத்தையே கருதும் வெறும்யாசகன் அல்லன்; கல்விமுதலிய பெருமையின் அளவையறிந்து கொடுத்துவிடின், அப்பரிசில், தினை யளவாயினும் நல்லதாகும்" என்னுங் கருத்துக்கொண்ட:—

"குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென

நின்ற வென்னையந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணு தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.''  (உ0அ)

என்னும் பாடலைக்கூறினர். இவர்கூறிய கருத்துப்போலவே, கபிலரென்னும் புலவர்பெருமானும் மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளலைநோக்கி:—

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே."  (கஉக)

என்று, "வரிசையறிந்து கொடுத்தலே கொடை"யாகுமென்பதை நன்றாக வற்புறுத்துதல் காண்க.

இங்ஙனம், பழையபுலவர்கள் தமது பெருந்தன்மைகளால், அக்காலத்தரசராற் பெரிதும் ஆதரிக்கப்பெற்றமையாற் கவலையென்பது சிறிதுமின்றியே வாழ்ந்துவந்தார்கள். "இன்னாராற் பாடப்பெற்ற அரசன்" என்று தன்னைப்புகழ்ந்து கொள்வதை அப்போதை அரசர் பெருங்கௌரவமாக மதித்துவந்தனர். தலையாலங்கானமென்ற இடத்தில் எழுரசர்களைப் போரில்வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், போரில் பகைவர்முன் சபதஞ்செய்யும்போது, "என்னை இழித்துக்கூறிய அரசர்களை யுத்தத்திற் சிதற அடித்து அவர்களைச் சிறைசெய்யேனுயின், மாங்குடிமருதன் முதலான நல்லிசைப் புலவர்கள் எனது தேசத்தைப்பாடாமல் ஒழிக" எனக் கூறினனென்றால் வேறுகூறுவதென்? இதனை:—

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய

* * *

வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை."

எனப் புறநானூற்று எ௨-ம் பாட்டில் வருதலால் உணர்க. இம்மாங்குடி மருதனாரே, இப்பாண்டியனை மதுரைக் காஞ்சியாற் புகழ்ந்தவர். இனி, இச்செழியன் போலவே, பூதப்பாண்டியன் என்ற மற்றொருவனும்:—

"வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி."

எனச் சபதஞ்செய்தான். இவ்வடிகளிற் கூறப்பட்டவர்களிலே பலர் புலவர்களாகத் தோன்றுதல் காணலாம். இவ்வாறே, "மோசி பாடிய ஆயும்" என ஆயண்டிரன் என்றவேள் புகழப்படுவன். அன்றியும், முன்னைப்புலவர்கள், தம்மில் அசூயை என்பதின்றி, மற்றொரு புலவரது அருமைபெருமைகளை உள்ளவாறே அறிந்துபோற்றிப் புகழுவர். அதிகமான் மகன் பொருட்டெழினி, கோவலூரை யழித்தபோது, "இன்றும் பரணன் பாடினன் மற்கொல் நீ, முரண்மிகு கோவலூர்நூறிநின்-னரணடு திகிரி யேந்திய தோளே" எனப் பரணர் அவ்வரசனைப்பாடின விசேடத்தை ஔவையார் புகழ்ந்தார். மாறோகத்து நப்பசலையார் என்னும் புலவர், மலையமான் திருமுடிக்காரியைப் புகழும்போது:—

"தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்."

எனக் கபிலர்பேராற்றலை உள்ளபடியே வியத்தலும்; பொருந்திலிளங்கீரனார் என்பார் சேரனொருவனைப் புகழும்போது:—

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றுமன் னென்றநின்
நாடுகொள் வரிசைக் கேற்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே."

எனக், கபிலர் இப்போது இருந்தால் எவ்வாறு புகழுவரோ அவ்வாறு நான் பாடுவேன், என்று சிறப்பித்தலும் அறிந்துமகிழத்தக்கன. இனி, இப்புலவர்களிற்பலர் பெருவள்ளல்களாற் பெரிதும் பேணப்பட்டும், மூவேந்தர்களது செங்கோன்முறையாற் காக்கப்பெற்றும், அறிஞர்களது கூட்டுரவால் அகங்களிக்கப்பெற்றும், அறிவுநிரம்பிய பெண்டுபிள்ளைகள் ஏவலராதியோரால் ஆனந்தமுற்றும் வாழ்ந்துவந்தனர். கோப்பெருஞ்சோழன் என்னும் நல்லிசையரசன், பிசிராந்தையார் என்னும் பெருந்தகையாளரைக் கண்டபோது, "யான் உம்மைப்பற்றி நெடுங்காலமாகக் கேள்வியுறுகின்றேன்; நீர் நரையிலராகக் காணப்படுகின்றீரே; அதன் காரணமென்ன" எனக்கேட்க அப்புலவர், பின்வரும் மிகவழகிய விடையைக்கூறினர். அது வருமாறு:—

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே." (கசுக)

இதன்பொருள்:—உமக்குக் கழிந்தவருஷங்களோ பலவாயிருக்க, நரையில்லாதிருப்பது எப்படியாயிற்றென்று கேட்பீராயின்; (சொல்லுவேன்) என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வர்களும் அறிவு நிரம்பினார்கள்; யான் எண்ணுவதெதுவோ அதையே எண்ணிச்செய்வர் என்னுடைய ஏவலாளரும்; அரசனோ, நீதியல்லாத காரியங்களைச் செய்யாதவனாய்க் காக்கின்றான்; இதற்குமேலே—யானிருக்கின்ற ஊரில், நற்குணங்கள் நிரம்பிப் பணியவேண்டுமுயர்ந்தோரிடத்துப்பணிந்து, ஐம்புலனும்

அடக்கிய கொள்கையையுடைய சான்றோர்கள் பலர்; இவையே என் நரையில்லாமைக்குக்காரணம்" என்பது. இப்பாடலொன்றே அக்காலத்துப் புலவர்களது நல்வாழ்க்கைக்குத் தக்க சான்றன்றோ. கவலேயே நரைக்குக்காரணமென்றும், அக்கவலைக்குரிய காரணங்கள் தம்மிடத்தின்மையால், அது தமக்கு இல்லையாயிற்றென்றும் இப்புலவர் கூறியிருப்பது, அறிஞர்கள் ஆழ்ந்துசிந்தித்து மகிழ்தற்குரியது.

இங்ஙனம், பழைய புலவர்பெருமக்களது குணாதிசயங்களிலே முக்கியமானவை சிலவே இங்கெழுதப்பட்டன. அவர்கள் அக்காலத்தடைந்திருந்த பெருமைகளையெல்லாம் எழுதுவதானுற் பலசஞ்சிகைகளாகும். இவ்வாறு, தமிழ்ப்புலமைக்கு அக்காலத்திருந்த பெருமதிப்பு, பிற்காலத்தில் சோழபாண்டியர் முதலியோர்நாளிலும் குறையாதிருந்ததென்றே தெரிகின்றது. ஒட்டக்கூத்தர் முதலிய பெரும்புலவர்கள் சோழரால் எவ்வளவுசிறப்பாக அபிமானிக்கப்பட்டு விளங்கினர் என்பதற்குச் சரித்திரங்களே சாட்சிகளாகும். இத்தகைய செல்வாக்கு, அதற்குப் பிந்தியகாலங்களில் அநேகமாக மாறி, இந்நாளில் முற்றுஞ் சிதைந்துவிட்டதென்னலாம். அக்காலத்திருந்ததுபோன்ற புலவர்பெருமக்களைப்போல்வார் இக்காலத்தில் இல்லாதுபோயினரென்று சிலர்சொல்லக்கூடும். ஆனால்,தமிழருமையறிந்து ஆதரிக்கும் வள்ளல்கள் அருகிவிட்டதுதான் தமிழ்ப்புலமை குன்றியதற்குக் காரணமேயன்றி வேறன்று. கல்வி முதலியவற்றின் செழிப்பு ஆதரிப்பவர் மிகுதியால் உண்டாவதேயன்றிப் பிறிதில்லை. இந்நாளில் தமிழ்ப்பிரபுக்கள் தம் சொந்தபாஷையை இகழுமளவு இந்தியதேசத்தே பிறபாஷைபயிலும் பிரபுக்களில்லையென்பது பிரசித்தமாக அறிந்ததே. இன்னோர் இகழ்தன்மட்டுமோ! அதன் விருத்தியைச் சிதைக்கவும் கூடியவரை முயல்கின்றனர். இவற்றையெல்லாம் ஈண்டுவிரிப்பதாயின், அது நம்மனோர் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிடுவதாக முடியுமென்றஞ்சுகின்றேன். இக்கொடிய நிகழ்ச்சியினிடையே, மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நாட்டித் தமிழ்ப்பயிரை வளர்த்துவரும் கருணைவள்ளலொருவரையே நினைத்துக்கொண்டு நாம் சிறிதாறவேண்டியிருக்கின்றது. இப்பெருந்தகையைப்போன்ற செல்வமுடையார்பலர் நந்நாட்டிலுளராயினும், அவர்களில் பத்துப்பெயரேனும் தமிழ்வளர்ச்சியின்பொருட்டு முற்பட்

டழைப்பார்களானால், பண்டைக்காலத்திருந்ததாகக்கண்ட பெரும் புகழும் புண்ணியமும் இக்காலத்தவரும் அடைதல் அரிதோ? தமிழ்த்தெய்வமே! இக்காலத்தில் நீயடைந்துள்ள பாக்கியங்களிற் சிறந்தது, இத்தமிழ்ச்சங்கவள்ளலைப் பெற்றிருப்பதே போலும்.

பத்திராசிரியர்.

---

# முனையதரையர்.

புனையுங் குழலாள் பரிந்தளித்த பொங்க லமுதம் பொரிக்கறியு
மனைய சவரி ராஜருக்கே யாமென் றருந்து மாதரவின்
முனைய தரையன் பொங்கலென்று முகுந்தற் கோது முதுகீர்த்தி
வனையும் பெருமை யெப்போதும் வழங்குஞ் சோழ மண்டலமே.

எனச் சோழமண்டலசதகத்தில் ஒரு பாடல் கூறப்படுகிறது. அழகிய பெண்ணொருத்தியால் அளிக்கப்பெற்ற பொங்கல்முதையும் பொரிக்கறியையும் முனையதரையர் என்பவர் உண்ணும்போது "இவை சவரிராஜரென்னுந் திருநாமமுடைய திருமாலுக்கே அர்ப்பணம்" என்று உண்பது வழக்கமென்பதும், அக்காரணத்தால் "முனையதரையன் பொங்கல்" என்று திருமாலமுதுசெய்தருளும் சிறந்ததோர் அன்னவிசேடத்தாற் சோழநாடு பெருமைபெறுவதென்பதும் இப்பாட்டால் விளங்குகின்றன. இப்பாட்டிற்குறித்த சவரிராஜர் என்னுந் திருநாமங்கொண்ட திருமால், கோயில்கொண்டருளுந் திவ்யதேசம், சோழநாட்டுத் திருக்கண்ணபுரமாகும். இத்திருப்பதி மான்மியத்தைத் தமிழ்க்கவிகளால் சிலகாலத்துக்குமுன் ஸ்ரீநாராயணசாமி நாயக்கரென்பார் பாடியிருக்கின்றனர். மேற்கூறிய கதையின் விஷயம் இப்புராணத்தால் விளங்கக்கூடுமென்று அதனை ஆராய்ந்தபோது, "முனியோதன அத்தியாயம்" என்னும் அதன் பகுதியில் இவ்வரலாறு முழுதும் நன்கு காணப்பட்டது. அதிற் கூறப்பட்டவை வருமாறு:—

தானம் வீரமுதலியவற்றால் பெரும்புகழ்வாய்ந்து விளங்கிய "வீரசோழன்" என்பான் சோணாட்டை ஆட்சிபுரிந்து வருங்காலை

யில், கல்விகேள்விகளானிறைந்த "முனையதரையர்" என்பார் அரசனாற்பெரிதும் அபிமானிக்கப்பெற்று, இருபதுநாட்டு அரசர்களிடமிருந்து வருதற்குரியதிறைகளை உரியகாலங்களிற்சேகரஞ்செய்து ராஜஸமூகத்துக்கு அனுப்பும் உயர்ந்த தண்டத்தலைவராக நியமிக்கப்பெற்றார். அவ்வுத்தியோகத்தை முனையர் சிறிதும் குறைவின்றி நடத்திக்கொண்டு வந்ததோடு, திருக்கண்ணபுரத்துத் திருமாலிடம் பெரும்பத்தி நாளும் வளரப்பெற்றவராய் அத்திருப்பதியிலே ஓர் அழகிய மாளிகை கட்டி வசித்துக்கொண்டு, திருமால் கைங்கரியம் சிறப்பச் செய்துவந்தார். இங்ஙனம் வாழ்ந்துவரும்போது, கணிகை பொருத்திபால் இவர் மோகமிக்கவராய் அவளின்பத்திலே அழுந்திவிட்டார்.

ஆயினும், அத்திருமால்பத்தியிற் சிறிதுங்குறைந்திலர். இவ்வாறு நிகழ்ந்துவரும்போது பெரும்பஞ்சமொன்று வந்து நாட்டைப்பெரிதும் வருத்தியது. அவ்வற்கடக்கொடுமையில் பிராணிகள் பசித்தீயால் மிகவிடர்ப்படுவதையும் சவரிப்பெருமாள் கைங்கரியங்கள் தடைபடுவதையுங் கண்டு "எம்பெருமானும் அவனது அவயவங்களாய் அவனின்வேறாகாத இவ்வான்மகோடிகளும் வருந்துவதே" என்று இரங்கி, அரசனது திறைப்பொருள்களையெல்லாம் இஃதீனமென்று கருதாமல், தானங்களிலும் பூஜைகளிலும் உபயோகிப்பாராயினர். பின்பு, வற்கடக்கொடுமை நீங்கி நாடுசெழித்தபின், அரசனது திறைப்பொருளை அனுப்புதற்கு வழியின்றி முனையர் கவலைப்படும்பொழுது, இச்செய்தி இவருக்கு விரோதியான மந்திரியொருவனால் சோழனுக்குத்தெரிவிக்கப்பட்டது. இதுதெரிந்ததும் அரசன் பெரிதுஞ்சினந்து மள்ளரையேவி "இறைப்பொருளைக் கொள்ளைகொண்ட முனையனை இரக்கமின்றி இமிசித்து மானபங்கப்படுத்திச் சிறைப்படுத்தி வாருங்கள்" என்று ஆக்ஞாபித்தனன். அன்னோர் இம்முனையரிடம்வந்து, அவ்வாறே பற்பலவிதமாகப் பொறுக்கக்கூடாத துன்பமிழைத்து மானபங்கப்படுத்திச் சிறையிட்டுச் சென்றார்கள். இங்ஙனம் சிறைபிற்படும் பெருந்துன்பத்துக்காற்றாராய் முனையதரையர் திருமாலருளை நினைந்து அரற்றினர். இங்ஙனம் நிகழ முனையரது காதற்கணிகையோ, தன்காதலர்க்கு நேர்ந்த பெருந்துன்பத்துக்காற்றாது, அங்குள்ள வாவிநீரினின்றுகொண்டு அத்திருப்பதி

எம்பெருமானைப் பலவிதமாகப்பிரார்த்தித்து ஓலமிட்டழுது, "எம்பெருமானே! இன்னும் ஐந்துநாளில் என்காதலரை யானடைய நீர் செய்யாவிடின், எரியில் மூழ்கி என் இன்னுயிர் துறப்பேன்" என்றுகூறி உணவுமுதலியன கொள்ளாமல் வருந்திநின்றனள்; இது நிற்க. திருக்கண்ணபுரத்தெம்பெருமான் முனையரதும் அவரது காதற்கணிகையரதும் ஆற்றொணாத் துன்பமெல்லாமறிந்து அவற்றைநீக்கியருளத். திருவுளங்கொண்டு, ஒரு பாகவதவேடத்துடன் சோழவரசன் கனவிடைத்தோன்றி, "யான் கண்ணபுரத்தான்; என் பத்தர்க்குற்ற துன்பம் நீக்கவந்தேனென்று, அவரைச் சிறைநீக்குதற்குவேண்டிய செய்திகளையெல்லாந் திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். இவற்றைக் கேட்டமன்னன் திடுக்கிட்டுவிழித்து, தன்மந்திரியை அழைத்து "பெரிய அபசாரம் உன்னால் நிகழ்ந்ததே" என்று அவனை மிகவுங் கடிந்து திருக்கண்ணபுரம்வந்து முனையரைச் சிறைநீக்கிவிட்டு அவரைநோக்கி "உம்மால் அடியேன் எம்பெருமான் தரிசனமும்பெற்றேன்" என்று அவரைப் பலபடியாகக் கொண்டாடி, "உமது காதற்கணிகை தீப்பாயுமுன்னர் நீர் அவளிடம் விரைந்துசெல்லுதிர்" என்று அனுப்பிவிட்டனன். அவரும் அவள் தீப்பாயுந்தருணத்திற் சென்று அவளைக்கண்டு இருவரும் ஆனந்தபரவசமடைந்திட, எம்பெருமான்திருவருளை மிகவும் வத்திப்பாடி, அன்றிரவிலே தம் திருமாளிகை புக்கனர். அப்போது நெடுநாட்பசியால் முனையர் இளைத்தவராதலின், அவர் நியமனப்படி, கணிகை, பாலரிசிபயறு நெய் சர்க்கரை இவைகலந்து அட்ட "பொங்க"லன்னத்தையாக்கி அவருக்குப்பணிமாற, அஃது அமிர்தமயமாய் இருந்தமையாலே முனையர் "இஃது எம்பெருமானுக்கே வற்றது" என்று உள்ளன்புடன் ஓதி அதனை உண்டனர். இங்ஙனம் அவ்விரவுகழிய, காலையிற் கோயிலைத் திருக்காப்புநீக்கி அருச்சகர் எம்பெருமானது திவ்யமங்களவிக்ரஹத்தை நோக்கியபோது நெய்புடையடிசில் மெய்படவழிந்திருந்ததுகண்டு, "இஃதென்னை குற்றம்வந்ததோ" என்று நடுங்கி எங்கும் சோதித்துவரும்போது, முனையதரையர் இரவில் நிகழ்த்திய செய்திதெரிந்து, அவ்வூராரெல்லாம் எம்பெருமான் திருவிளையாடலை நினைந்து ஆடிப்பாடி அகங்களித்தார்கள். அப்போது முனையர் இவ்வற்புதத்தை எம்பெருமான் தம்பொருட்டு நிகழ்த்தியபடியால், அவ்

விசேடம் உலகமுள்ளபரியந்தம் விளங்கும்படி, அன்றிரவில் தாமர்ப்பித்த பொங்கலமுது பெருமாளுக்கு எக்காலத்தும்நிகழ வேண்டிய வருவாய்களை ஏற்படுத்தினர். அக்காலமுதல் இன்றும், அப்பொங்கல் "முனியோதனம்" என்னும் கீர்த்தியுடன் பெருமாளுகந்து திருவமுதுசெய்தருளுஞ் சித்திரான்னமாக நடைபெற்றுவருகின்றது" என்பது.. இச்சரித்திரம் சோழமண்டலசதகத்திற்கண்ட வரலாற்றைச் செம்மையாக விளக்கவல்லது. இனி, மேற்கூறிய சரித்திரத்திற் கண்டவாறு, முனையதரையருக்கு அவருடைய காதற்கணிகை அவரது பிரிவாற்ருமையைக் குறித்தெழுதிய வெண்பாவொன்று தமிழ்நாவலர் சரிதையினும், முதலிற்காட்டிய சோழமண்டல சதகப்பாடலின்கீழும் குறிப்புடன் காணப்படுகின்றது. அது :—

"இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி லன்னதுவு நீயறிவை—வென்றி
முனையா கல்வி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ."

என்பது. இப்பாடலால், முனையதரையர்பால் அவர்கணிகை வைத்திருந்த பேரன்பு இற்றென விளங்குவதோடு, அவள் புலமையிற்சிறந்தவளென்பதும் புலப்படும். இப்பாட்டு, மேலேகுறித்த சரித்திரத்திற் குறித்தபடி, முனையதரையர் சிறைப்படுத்தப்பட்டு வருந்தியபோது, ஷை கணிகை, குறித்தநாளில் அவர்வருகையை விரும்பி எழுதியதாகக் கொள்ளத்தக்கது. "இன்றைக்கு நின்றுவரில் அன்னதுவு நீயறிவை" என்பது, அக்கணிகை தன்னுயிரை விடவிருந்த செய்தியைக்குறிப்பித்தலால், அவள் தீப்பாயவிருந்த கதையினுண்மை தெளிவாகிறது. இனி, புராணத்தில், முனையதரையர் என்பவர் "வீரசோழன்" காலத்தவரென்று கூறப்படினும் — அபயன் என்னுங் குலோத்துங்கசோழன் மகனுகிய விக்கிரமசோழனதவையிலிருந்த முக்கியமந்திரிகளில் இப்பெயருடையார் ஒருவர் காணப்படுகிறார். இதனை விக்கிரமசோழனுலாவில்,

"ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுட்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற்—போர்க்குத்
தொடுக்குங் கமழ்தும்பை தூசினொடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும்."—

என வருதலால் உணர்க. இதனால், மேற்குறித்த சோழமண்டல சதகப்பாடல்கட்கும் புராணக்கதைக்கும் உரியவர், இம்முனையர் கோனேபோலும். இவராயின், விக்கிரமசோழனுக்கு வீரசோழனென்னும் மறுபெயருமுண்டென்று கொள்ளல்வேண்டும்.

பத்திராசிரியர்.

---

# மதுவிலக்கு.

---

சென்றமாதத்திலே சென்னையிலுள்ள தொண்டமண்டலம் ஹைஸ்கூலில் "லாஹிரிவஸ்துக்களால் வருந்தீங்கு" என்னும்விஷயத்தைப்பற்றி மிஸ்ஸஸ் பெஸன்ட் பேசினர். அவ்விஷயத்தின் சாராம்சம்,—"சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளிவந்ததை, அடியில் பதிப்பித்திருக்கிறோம்:—

தேசத்தால் ஆங்கிலத்தவளாகிய நான் இவ்விந்திய சபையில் மதுவிலக்கைப்பற்றிப்பேச நாணுகிறேன். ஏனெனில் இந்தியமதங்கள்—இந்துமதமும் மகமதியமதமும்—மதுஉபயோகிப்பதைத் தடுத்திருக்கின்றன. இருந்தும் இக்காலத்தில் மதுஉபயோகிக்கும் வழக்கம் இந்தியரிடையில் பரவிவருகின்றது. கவர்ன்மெண்டு கணக்குகளைப்பார்த்தால் மதுவஸ்து வெளிநாட்டிலிருந்து வரவர அதிகமாய் இத்தேசத்திற்கு வருகின்றது என்று வெளியாகிறது.

இப்படி அதிகரிப்பது இங்குள்ள மேலுட்டார் தொகை அதிகரிப்பதால் என்று சொல்லுவதற்கில்லை. அன்றியும், வெளியிலிருந்து வருமிந்த வஸ்துக்கள் வரவர விலையேறியவாயிருக்கின்றன. ஆகவே இவைகளைவாங்கி உபயோகிப்போர் பணக்காரர்களென்று ஏற்படுகிறது. உயர்வகுப்போர்களாகிய பிராமணர்களையும் இந்தத் துர்வழக்கம்பற்றியிருக்கிறது. இது தேசத்திற்கே கெடுதிவிளைப்பதாகும். இப்படி இந்தியர்களுள் இந்தவழக்கம் பழகுவதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம்.

பெரிய மனிதர்களாயுள்ளோர் வெள்ளையர் கொடுக்கும் விருந்து சமயங்களில் கலக்கவேண்டியதாகி அவரது வழக்கங்களை அனுசரிக்கவேண்டியிருக்கிறது. அரசனது தேகசௌக்கியத்திற்காகக் குடிக்கிறேனென்று ஒயின்சாப்பிடுவது வெள்ளையர்களுள் வழக்கம். இவ்விஷயத்தை எட்வர்டுஅரசர் கவனித்து இவ்விதமான சமயங்களில் ஒயினுக்குப்பதிலாக ஜலத்தை உபயோகிக்கலாமென்று உத்தரவிட்டார். இனி ஒயின் குடிப்பதிற்போல ஜலங்குடிப்பதிலும் ராஜவிசுவாசம் குறைவில்லாமலிருக்கிறது! இரண்டாவது காரணம், மேசனறி (Masonry) சங்கங்களாகும். இந்த சங்கங்கள்கூடி முடியுந்தோறும் இறைச்சியும் ஒயினும் வழங்கும் ஒரு விருந்திடுவது வழக்கமாயிருக்கிறது. இதனால் கெட்டுப்போன இந்தியர்கள் பலரை எனக்குத்தெரியும். மூன்றாவதாக இக்காலப்படிப்பில் மதபோதனை அடங்காமையாகும். மற்றையவிரண்டிலும் இதுவே பெரிய காரணமாகுமென்று நினைக்கிறேன்.

இந்நாட்டிலுள்ள இவ்வழக்கத்தால் மேனாடுகளில் விளைவதிலும் அதிகத் தீங்குவிளையும். ஏனெனில் இந்நாட்டின் சீதோஷ்ணமும் தேகவமைப்பும் பாரம்பரியமும் தீங்கை அதிகப்படுத்துகின்றன. மேனாட்டார் தலைமுறை தத்துவமாகக் குடியிற்பழகினவர்; இந்தக் குடி வழக்கத்தால் க்ஷயரோகமும், ரத்தாசய வியாதிகளும், நரம்பு நோய்களும், வாயுரோகமும், சூலைக்கட்டுமுண்டாகின்றனவென்று மேனாட்டார்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்தியாவை ஆதியில் காத்த மகாவீரர்களாகிய ராஜபுத்திரதலைவர்கள் அதிபாலியத்திலிறக்க, அவர்கள் ஸ்தானத்தில் இப்போது சிறுகுழந்தைகளிருக்கிறார்கள். பாட்டியாலா, பாரிட்பூர் போன்ற சீக்கியநாடுகளிலும் இதே நிலைமைதான். இப்போது தலைமைவகிக்கும் இச்சிறுவர்கள் ஆசாரமுடைய ஹிந்துக்கள்; மதுவைத்தொடுவதேயில்லை. இவர்கள் முன்னோர் அகாலமரணமானதற்கு அவர்கள் மேனாட்டுப்போதகர்கள் கைப்பட்டு, மேனாட்டுவழியில் விழுந்து மேனாட்டு ஆசாரவிவகாரங்களைப்பற்றியதே காரணமாகும். தலைமுறைக்கணக்காய் பரிசுத்தத் தன்மையுடைய நீங்கள் இத்தீயவழக்கத்தைப்பற்றினால் உங்களுக்கு மிக்கதிதான். இதனால் கெடுவது நீங்கள்மட்டுமன்றி உங்கள் சந்ததியுமாகும். ஆகவே இந்திய ஜனத்தை வேரிலேயே கெடுத்துவிடு

வதாகும் இந்த வழக்கம். மேனாட்டாருள் நல்ல அம்சங்களைமட்டும் கிரகித்துத் தீயவைகளையொழிக்கவேண்டும்.

மேலும், ஒவ்வொருவர்தேகமும் நிமிஷந்தோறு மாறிவருகின்றது. இஃது இக்கால சாஸ்திரவான்களும் பிரம்மஞ்ஞானிகளும் அங்கீகரித்துக்கண்டுள்ள உண்மை. ஒவ்வொரு நிமிஷமும் மனிதன் இறந்துகொண்டேயிருக்கிறானென்று சொல்லலாம். தேகமுழுமையும் ஒரேயடியாய் மாறிவிடுகின்றதே மரணமென்பது. இந்தச்சபையினுள் வந்தபடியே தேகமுடையவர்களாய் உங்களிலொருவரும் வெளிப்போகமாட்டீர்கள். ஒருவன்தேகத்தில் சிலவஸ்துக்கள் வெளிப்பட்டு மற்றொருவன் மேல்விழும். அம்மைநோய் கொண்டவொருவன் எழுந்தவுடன் அவ்விடத்தில் டிராம்வண்டியில் வேறொருவன் உட்காரமாட்டான். ஏனெனில் அந்நோயணுக்கள் தன்னைப்பிடிக்குமென்றபயத்தினால். குடிக்கிறதாகிய நோயுமப்படித்தான். ஆகையால் நாமன்றி நம்மயலாரு மிந்தக்கெட்டவழக்கம் கொள்ளாமல் காப்பது பெருத்த பொதுவிசாரமாகக் கொள்ளத்தக்கது. "என்னுடம்பை நான் என்னவேண்டினாலும் செய்துகொள்வே" னென்பது அசடர்கள் வார்த்தையாகும். ஒவ்வொருவருடம்பிலும் மற்றோருக்குப்பாத்தியமுண்டு; ஒருவருடம்பால் மற்றொருவர் கெடுவதாயிருக்கிறது. நீ, அழுக்குடையவனாய்க் குடிகாரனாய்ப் பெருந்தீனிக்காரனாய் இருந்தால், சமூகமெங்குமே கெட்டவிஷத்தைச் சிதறும்படியான ஆபத்தாய் விடுகிறாய்.

உண்மை இப்படியிருப்பதால், முன்சிபாலிடி தன்தொழிலைச் சரிவர உணர்ந்துசெய்வதாயின், நகரத்தில் குடிப்பதற்கான பாகமென்று பிரத்தியேகமாய்வைத்து, மற்றோர் அங்கேபோகாமல் தடுக்கவேண்டும். இதனால் ஒவ்வொருவருக்குமுள்ள சுயேச்சையைக்கட்டுப்படுத்துவதாகுமென்றால், குடிவழக்கமில்லாதவர்கள் சுகசரீரிகளாயிருக்கப் பாத்தியமுண்டல்லவா? அந்தப்பாத்தியத்திற்குக் கெடுதிசெய்வதும் சுயேச்சையைத் தடுப்பதாகாதோ? மேலும் நன்னடத்தையுடையவர்களிடம் இந்த விஷத்துகள்கள் அதிகமாய்த்தரிக்காது போகவும்கூடும். குடிமுதலிய கெட்டவழக்கமுடையவனைக் கண்டால் தூரவிலகவேண்டும். அவனோடு புசிக்கவோ, அவன்வீட்டிற்குப் போகவோ, அவனிடம் பழகவோ கூடாது. அவன், ஏனென்றுகே

ட்டால் உண்மையைக் கூசாதுசொல்லவேண்டும். அப்படிச் செய்தால் தான் வெட்கி அவன் நல்வழிப்படுவான். பூர்வத்தில் ஜாதிவரையறை ஏற்படுத்தியது இக்காரணம்பற்றியேயாம். நடத்தையில் சுத்தமில்லாதவர்களைத் தொடக்கூடாதென்றும் அயலார்பாத்திரத்தைத் தொடக்கூடாதென்றும் ஏற்படுத்தியதற்குக் காரணமிதுவேதான். ஆனாலும், பிறப்பினாலோ பெயரினாலோ அன்றி, நடத்தையால்தான் பார்ப்பான் உயர்குலத்தோனாகிறான். ஆகவே அசுத்தனான பிராமணனைவிட சுத்தனான சூத்திரனை வீட்டில் சமையலுக்கு வைத்துக்கொள்ளலாம்.

குடியினால் வேறோர் அபாயமுண்டு. அது மூளையைக்கெடுத்துவிடுகிறது. சந்தியாவந்தனம் செய்யவேண்டியவனாகிய பிராமணன் இந்தக் குடிவிஷத்தை அஞ்சி விலக்கவேண்டியவனாகிறான். காயத்திரிமந்தர ஸ்தானங்களாகிய மூளையின் பாகத்தை இது கெடுத்துவிடுகிறது.

சூக்ஷ்மசரீரத்தைப்பற்றி யோசிக்குமிடத்து, அதற்கும் தீங்கு விளைகிறது. இறந்தபிறகு ஒரு மனுஷ்நிலையை அறியக்கூடுமானால், இந்தத்துர்வழக்கத்தை ஒழிக்க வேறுமுகாந்தரமெடுத்துச் சொல்லவேண்டியதில்லை. கர்மலோகத்தில் இவன் பிரேதனானபிறகு குடிவழக்கத்தாற் படும்பாடு சொல்லத்தரமன்று. இவ்விதம் கர்மலோகத்தில் வாதைப்படுகிறவர்கள் மேனாடுகளிற்போற் கீழ்நாடுகளிலும் அதிகப்பட்டுவருகிறார்கள். குடிகாரனாயுள்ளவனைச் சிலவேளையில் சிலநாள் அவ்வழக்கத்தை நிறுத்தச்செய்யலாம். பிறகு அந்தவழக்கம் அவனை மீறிவிடும். உதாரணமாக, ஓர் இந்தியஅரசர் இந்தவழக்கத்திற்குள்ளானார். அவர் சிலவருஷங்களுக்குமுன் என்னுதவியை வேண்டினார். அவர்சகோதரர் இந்த வழக்கத்தால் மூளைஜன்னிகண்டு இறந்துபோயிருந்ததால், தன்னை அக்கதியினின்று காப்பாற்றும்படி வேண்டினார். நான் சிரமப்பட்டு விவகரித்து அவரைக்கொஞ்சநாள் சரிப்படுத்தினேன். இரண்டுமூன்று வருஷங்களுக்கப்புறம் மறுபடி அந்த வழக்கத்தில் விழுந்தார். அப்புறம் விடுவதும் விழுவதுமாயிருந்து கடைசியில் இந்த லாகிரிக்கே அதிபால்யத்தில் இரையானார்: இறந்தபிறகு உள்ளநிலையென்ன! இந்த லாகிரி அவரை நூறுபங்கு

அதிகரித்து வாட்டுகிறது. ஸ்தூலதேகம் ஒழிந்துவிட்டதால், அந்த அவாமட்டும் நிற்கிறதேயன்றி அதைத் திருப்திசெய்தற்குவேண்டிய ஸ்தூல அங்கங்களில்லை. இப்படி அடங்காத தாகத்தோடு நரகத்தில் அவஸ்தைப்படவேண்டியதாகிறது. இந்த அவஸ்தை எத்தனைகால மிருக்குமென்றால், எத்தனைகாலம் உலகிலிருந்து இந்த வழக்கத்துக் காளாகியிருந்தானோ, அவ்வளவு காலமிருக்கும். இந்தக்குடியாசை தொலையாததுபற்றித் தன்னைத்தான் தின்றுதணிகிறவரை, இந்தத் தாகத்துடன் தவிக்கவேண்டியதே. இந்த வாதைக்குச்சமானம் பூலோகத்தில் ஒன்றும் சொல்லமுடியாது. இங்கே கடினதேகமாயுள்ளதால், இதினும் நுட்பமான ப்ரேததேகம் இந்த ஆசையால் அதிகம் பீடிக்கப்படுகிறது. இந்தக்கதிக்குக் குடிகாரரொருவரும் தப்ப முடியாது. நான்சொல்வது பொய்யல்ல. நானே கண்ணால் இந்தப்ரேதஅவஸ்தையைப் பார்த்திருக்கிறேன். உங்கள் புராதன புஸ்தகங்களில் நரகலோகத்தைப்பற்றியுள்ள விவரங்கள் தவறல்ல. அவற்றில் உண்மை உருவகமாக இயற்றிச்சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் "நெருப்பு" என்று இருந்தால், இந்தத்தீராத தாகத்தைக் குறிப்பதாய்க்கொள்ளவேண்டும். அவை மெய்யான அனுபவங்களையே சொல்லுகின்றன. பிறகு இக்கஷ்டத்தில் விழாமல் இப்போதே அறிவுடையவர்களாய் நடந்துகொள்ளுங்கள்.

பாபஞ்செய்தபிறகு அனுதாபப்படின் பிராயச்சித்தம் ஆகிவிடுமென்னும் மேனாட்டுக்கொள்கை கேவலம் அறிவீனத்தினின்று ஜனித்ததாகும். உங்களிடை அவ்வித அஞ்ஞானக்கொள்கை கிடையாது. "கர்மாவுக்குத் தப்புவோர் ஒருவருமில்லை" யென்பது உங்கள்நீதி. வினைப்பயனை வெல்லமுடியாதென்பது சிறுபிராயமுதல் உங்களுக்கு உபதேசமாயிருக்கிறது.

இவ்விதமான சபைகளில் மதுவழக்கமுடையவன் வரமாட்டான். ஆகையால் இப்போது என் எதிருள்ளவர்களெல்லாம் வெளியில் குடியனைக்கண்டவிடத்தில் தக்கபடி அவனுக்குப் புத்திசொல்லித்திருப்ப முயலவேண்டும். இந்த முயற்சிக்கு என் பிரசங்கம் சாதனமாகுமென்று நம்புகிறேன். இவ்விதப் பிரசங்கங்களால் பரிசுத்த புத்தியாகிய ஆறுபெருகி, சென்னையோர்களை எதிர்த்துள்ள ஆபத்தி

னின்றும் அவர்களை மீட்கவேண்டும். இதுவே நான் உங்களுக்குச்சொல்வது. நாம் வேண்டுவதும், உழைப்பதும், ஸ்மரிப்பதும்—பெருமையும வன்மையும் சுத்தமும், இவற்றால் சுயேச்சையும் உடைய இந்தியாவை அடைவதேயாம். குடிவழக்கங்களினின்று கரையேற இங்கிலண்டு பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கு மேல்குலத்தாரும் மதுவிலக்கை வரவர அதிகமாக ஆதரித்துவருகிறார்கள். பொதுவிருந்துகளில் ஒயினை மறுப்பது இப்போது அருமையாய்க்காணப்படும் உண்மையல்ல. இங்கிலண்டில் அப்படியிருக்க, ஆதிகாலமுதல் பரிசுத்தமும் மேன்மையுமுள்ள இந்தியாவை இந்த வழக்கத்தில் நீங்கள் அமிழ்த்திவிடலாமா? இந்தியாவாகிய தாய்ப்பூமி, குடிகாரர்களாலோ, அல்லது சுத்தர்களாலோ. கடைத்தேறுவது? மகமதியரும் இந்துக்களும், மனுவழி வந்தோரும் இஸ்லாம்வழி நிற்போரும், தோளொடு தோள்சேரக் கைகோர்த்துநின்றால் இந்தியாவை எதிர்த்துள்ள இந்த அபாயத்தை நீக்கமுடியும்.

---

உ

சிவமயம்.

# படிக்காசுப்புலவர் சரிதம்.

தாயினு நல்ல தயாவுடை யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கள் மெய்ம்முழுதுந்
தீயினும் வீழ்வர் முதுகினுஞ் சோறிட்டுச் சீறாவின்
வாயினுங் கையிடு வாரவர் சாண்டொண்டை மண்டலமே.

எனப்புகழ்பெற்ற தொண்டைமண்டலத்திலே சற்றேறக்குறைய உ௦௦-வருடங்களுக்கு முன்னம் பொற்களத்தூரெனவழங்கித் தற்காலம் தென்களத்தூரென வழங்கும் தலத்தின்கண்ணே நவவீரர்வழி வந்த செங்குந்தமரபினிலவதரித்து சிவானுக்கிரஹத்தால் தமிழ்க்கலைமுழுதும்பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப்பெற்று இல்லறவாழ்க்கையில் சிறந்துவிளங்கிய இவர், கி. பி. 1647-1672-ம் வருடங்களுக்கிடையே இராமநாதபுரத்திலிருந்து அரசுபுரிந்த திருமலைசேதுபதி என மறுநாமம்பூண்ட இரகுநாதசேதுபதியின் சமஸ்

தான வித்துவானுகவிருந்து சிலகாரணத்தினுல் அங்குநின்றும் நீங்கி வறுமைப்பிணியால் நலிவுற்ற இப்புலவர் அந்நாட்டிலுள்ள வல்லநகரத்தையடைந்து காளத்திபூபதியென்பவரின்மேல் ஓர் செய்யுளியற்றித் தம் வறுமைப்பிணி தொலைப்பானெண்ணி அவர்சமுகம் சென்று,

பெற்றுளொருபிள்ளையென்மனையாட்டியப்பிள்ளைக்குப்பால்
பற்றுதுகஞ்சிகுடிக்குந்தாமல்லபாலிரக்கச்
சிற்றுளுமில்லையிவ்வெல்லாவருத்தமுந்தீரவொரு
கற்றுதாவல்லையோவல்லைமாநகர்க்காளத்தியே.

என்னுஞ்செய்யுளைப் பிரசங்கித்து, அவரால் சில பாற்பசுவளிக்கப் பெற்றுப் பின்னர்,

வழிமேல்விழிவைத்துவாட்டாமலென்மனையாளைமற்றோர்
பழியாமற்பிள்ளையும்பாலென்றழாமற்பகீரொனுஞ்சொல்
மொழியாமலென்னைவரவிட்டபாவைமுசித்துச்சதை
கழியாமலாவளித்தாய்வல்லைமாநகர்க்காளத்தியே.

என்னுஞ் செய்யுளால் அவரைப்புகழ்ந்து பாடினர். பின்னர் மாவண்டூரிலே மிக்கபிரபுவாயிருந்த கஸ்தூரிமுதலியார் குமாரர் கறுப்பமுதலியாரென்னும் ஓர் வேளாளர் வேண்டுகோளின்படி **"தொண்டைமண்டலசதகம்"** என்னும் ஓர் பிரபந்தம்பாடி அரங்கேற்றி அவரால் வேண்டுந்திரவியங்கள் அளிக்கப்பெற்றனரேயன்றிப் பல்லக்குஞ்சுமக்கப்பெற்று அவ்வுவகைமேலீட்டினுல்,

காவைவென்றிகெத்தூரிகண்மணிகறுப்பனென்னு
மாவையம்பதியான்றொண்டமண்டலசதகங்கேட்டு
நாவலர்புகழ்ந்துமெச்சநவநிதிபொழிந்துநன்றாய்ப்
பூவுலகெங்கும்போற்றப்புகழ்நிலைநிறுத்தினுனே.

எனவும்,

ஓர்கறுப்புமில்லாததொண்டவளநன்னாட்டிலுசிதவேளைச்
சீர்கறுப்பொன்றில்லாதகத்தூரிமன்னனருள்சேயைப்பார்மே
லார்கறுப்பனென்றுசொல்லியழைத்தாலுநாமவனையன்பினுலே
பேர்கறுப்பனிறஞ்சிவப்பன்கீர்த்தியினுல்வெளுப்பனெனப்பேசுவோமே.

எனவும்,

எல்லப்பனம்மையப்பன்றருதிருவேங்கடநாதனெழிற்சிராமன்
வல்லக்கொண்டையன்மாதைவேங்கடேசுரன்போலவரிசைசெய்தே
செல்வத்தம்பியருடனேகத்தூரிமகன்கறுப்பன்றெருவீதிக்கே
பல்லக்குத்தான்சுமந்தானதுமக்கோராயிரம்பொன்பரிசுதானே.

எனவும், வழங்குஞ் செய்யுண்முதலியவற்றால் புகழ்ந்து மகிழ்ந்திருக்குங்கால், புலவர் சிவதரிசனஞ்செய்வானெண்ணி பலசிவஸ்தலங்களையுந் தரிசித்து வணங்கிக்கொண்டு சிதம்பரமடைந்து கனகசபை சென்று சபாநாதரையும் சிவகாமியம்மையையும் தரிசித்து,

"பொல்லாதமூர்க்கருக்கெத்தனைதான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டானகுணம்வருமோநரொத்திரியிற்
சல்லாப்புடவைகுளிர்தாங்குமோநச்சந்தைதனிற்
செல்லாப்பணம்செல்லுமோதில்லைவாழுஞ்சிதம்பரனே."

எனவும்,

"வேல்கொடுத்தாய்திருச்செந்தூரர்க்கம்மியின்மீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின்மணவாளனுக்குக்கவுணியர்க்கும்
பால்கொடுத்தாய்மதவேளுக்குமூவர்பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்கேதுங்கொடுத்திலையே."

எனப்பாடித் துதித்தவளவில், பாட்டுக்குவந்தருளும் பரமேட்டி தொண்டரின் அன்பின்றிறத்திற்குவந்து பஞ்சாக்ஷரப்படிமீது ஐந்து பொற்காசுவைத்தருளினர். புலவர் போற்றிப்பணிந்து அருட்செயலை நினைந்தேத்தி ஆனந்தங்கொண்டனர். அதுமுதலாகவே "படிக்காசுப்புலவ"ரென்று, யாவரும் புகழ்ந்துபோற்றத் திகழ்ந்துநின்றனர்.

பின்னர் அத்தலத்தினின்றும் கடிதில்நீங்கித் தென்னாட்டையடைந்து மீண்டும் இரகுநாதசேதுபதியைக் கண்டு,

மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றெட்டுக்
கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்த்ரதாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே.

என்னுஞ் செய்யுளைப்பாடிச் சில பரிசுபெற்று பல்லக்குமுதலிய விருதுகளுடன் சிவகங்கையை யடைந்தபொழுது அதனரசர்பந்துவான

"திருமலைத்தேவர்" இவரது ஆரவாரத்தைநோக்கி அழுக்காறுகொண்டு தமது பரிசனர்களைவிடுத்துப் புலவரையழைத்துத் தமதாண்மனையின்கண்ணுள்ள "கிளிக்கூட்டுச்சிறையிலே" யடைத்துவைக்க, புலவர் சினந்துவருந்தினரெனினும்,

"ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந்துறும்."

என்பதைச் சிந்தித்துத்தெளிந்து,

நாட்டிற்சிறந்ததிருமலையாதுங்கநாகரிகா
காட்டில்வனத்திற்றிரிந்துழலாமற்கலைத்தமிழ்தேர்
பாட்டிற்சிறந்தபடிக்காசனென்னுமொர்பைங்கிளியைக்
கூட்டிலடைத்துவைத்தாயிரைதாவென்றுகூப்பிடவே.

என்னுஞ் செய்யுளைப்பாடி. அவரைவசப்படுத்திப் பரிசுபெற்று அதினின்று நீங்கிக் காயற்பட்டணத்தையடைந்து சீதக்காதியென்னும் ஓர் பிரபுவைக்கண்டு,

நேசித்துவந்தகவிராசர்தங்கட்குநித்தநித்தம்
பூசிக்குநின்கைப்பொருளொன்றுமேமற்றப்புல்லர்பொருள்
வேசிக்குஞ்சந்துநடப்பார்க்கும்வேசிக்குவேலைசெயும்
தாசிக்குமாகுங்கண்டாய்சீதக்காதித்யாநிதியே.

என அவர் பெருமையை வியந்தும்,

ஓர்தட்டிலேபொன்னுமோர்தட்டிலேநெல்லுமொக்கவிற்கும்
கார்தட்டியபஞ்சகாலத்திலேதங்கள்காரியப்பேர்
ஆர்தட்டினுந்தட்டுவாராமலேயன்னதானத்துக்கு
மார்தட்டியதுரைமால்சீதக்காதிவரோதயனே.

எனவும்,

ஈயாதபுல்லரிருந்தென்னபோயென்னவெட்டிமரம்
காயாதிருந்தென்னகாய்த்துப்பலனென்னகைவிரித்துப்
போயாசகமென்றுரைப்போர்க்குச்செம்பொன்பிடிபிடியாய்
ஓயாமலீபவன்வேள்சீதக்காதியொருவனுமே.

எனவும் அவர் ஈகையைச்சிறப்பித்தும்,

தடக்கும்பகிம்புரிக்கொம்பாசலபதத்தந்திபட
நடக்குந்தாங்கத்துரைசீதக்காதிநன்னாட்டிலுள்ள

வடக்குங்குமக்கொங்கைப்பெண்ணென்பவள்தெருவாசலிலே
கிடக்குங்கவியும்பாராசரத்தினகிரீடமுமே.

என அவர் நாட்டைவியந்தும்,

தரைகண்டமட்டும்படர்ந்தண்டகோளமுந்தாவியெங்கும்
உரைகண்டகீர்த்திபெறுஞ்சீதக்காதியுலகினில்வெண்
டிரைகண்டெழுங்கடன்மீதேதன்வங்கத்தைச்செல்லவிட்டுக்
கரைகண்டவனினங்காணுனென்னுசைக்கடற்கரையே.

மைப்போதகமும்வளநாடுஞ்செந்தமிழ்வாணர்க்கருள்
கைப்போதகமனையான்சீதக்காதியைக்காத்திருந்த
வப்போதறிந்திலமிப்பாழ்ம்பணத்தினருமையெல்லா
மிப்போதறிந்தனமீயாதபுல்லரிடத்திருந்தே.

காய்ந்துசிவந்ததுசூரியகாந்திகலவியிலே
தோய்ந்துசிவந்ததுமின்னார்நெடுங்கண்டொலைவில்பன்னூல்
ஆய்ந்துசிவந்ததுபாவாணர்நெஞ்சமனுதினமும்
ஈந்துசிவந்ததுமால்சீதக்காதியிருகரமே.

என அவன் பெருவண்மையைப் புகழ்ந்தும், அப்பிரபு சமுகத்திலேயே புலவர் திலகமாய்விளங்கி அவரால் நன்குமதிக்கப்பெற வாழ்ந்துவந்தனர்.

இங்ஙனம் புலவர் குழாங்கட்குக் கற்பகதருவெனவிருந்த பிரபுகுல சிகாமணியாகிய சீதக்காதிவள்ளல் திடீரென மண்ணுலகநீத்து விண்ணுலகேகினர். இதனையுணர்ந்த புலவர் பிரபு உயிர்நீத்தமைக்கு ஆற்றாது மிகவருந்தி,

விண்ணுக்குமண்ணுக்கும்பேராய்விளங்குதேவேந்திரனென்னுங்
கண்ணுக்கினியதுரைச்சீதக்காதிகமலநிகர்
தண்ணுக்கிசைந்தவதனசந்த்ரோதயசாமியிந்த
மண்ணுக்குள்ளேயொளித்தான்புலவோர்முகம்வாடியவே.

எனவும்,

பூமாதிருந்தென்புவிமாதிருந்தென்னபூதலத்தில்
நாமாதிருந்தென்னநாமிருந்தென்னநன்னுவலர்க்குக்
கோமானழகமர்மால்சீதக்காதிகொடைமிகுந்த
சீமானிறந்திட்டபோதேபுலமையுஞ்செத்ததுவே.

எனவும்,

நற்றாய் சோதிடரை நிந்தித்ததாகவமைத்துக்கூறியது.

மாகத்தத்தும்புகழான்பகைவேந்தர்மகுடம்பொடி
யாகத்தத்தும்பரியான்சீதக்காதியணிமலரி
லேகத்தத்தும்பியிசைபாடுமோர்பினிலென்மகட்கோர்
மோகத்தத்துண்டென்றுசொன்னாரிலைமுன்மொழிந்தவரே.

எனவும்,

தேட்டாளன்காயற்றுறைசீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்பநாட்டிவைத்தான்றமிழ்நாவலரை
ஓட்டாண்டியாக்கியவர்கடம்வாயிலொருபிடிமண்
போட்டானவனுமொளித்தான்சமாதிக்குழிபுகுந்தே.

எனவும்,

மறந்தாகிலுமரைக்காசுங்கொடாமடமாந்தர்மண்மேல்
இறந்தாவதென்னவிருந்தாவதென்னவிறந்துவீண்போய்ச்
சிறந்தாளுங்காயற்றுறைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப்பிழைப்பில்லையே.

எனவும் இக்கவிகள்கூறி இரங்கினார்.

பின்னரங்கு நின்றுநீங்கித் திருச்செந்தூரடைந்து முருகக்கடவுளைத் தரிசித்து,

முன்னநின்னன்னைமுலையூட்டிமையிட்டுமூக்குச்சிந்திக்
கன்னமுங்கிள்ளியநாளல்லவேயென்னைக்காப்பதற்கே
அன்னமுமஞ்ஞையும்போலிருபெண்கொண்டவாண்பிள்ளைநீ
இன்னமுஞ்சின்னவன்றானோசெந்தூரிலிருப்பவனே.

முற்கரையப்பரையேறவிட்டாட்கொண்முதல்வருள்ளக்
கற்கரைக்கும்படிபோதித்திடுங்கருணைக்கடலைச்
சிற்பரைக்குட்டியையெங்கெங்குந்தித்திக்குஞ்செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக்கண்டேன்செந்தூரெனுந்தானத்திலே.

சின்னஞ்சிறுபிள்ளைசெங்கோட்டுப்பிள்ளைசிவந்தபிள்ளை
பொன்னன்மணிப்பிள்ளைபூலோகமெங்கும்புகழும்பிள்ளை
சொன்னஞ்சழல்கின்றசூரனைக்கொன்றசொக்கேசர்பிள்ளை
வன்னக்கிளிப்பிள்ளைசெந்திற்குறத்திக்குமாப்பிள்ளையே.

கல்லடிக்குமுளியிரண்கொதடிக்குளடிப்பதென்னக்கவிதைகேட்டுப்
பல்லடிக்கக்கிடுகிடெனப்பறையடிக்குநெஞ்சர்தமைப்பாடுவேனோ
வில்லடிக்கும்பிரம்படிக்குங்கல்லடிக்கும்விரும்பிநின்றமெய்யனீன்ற
செல்லடிக்குந்தடவரையிற்சேறடிக்கவலையடிக்குஞ்செந்திலானே.

என்பது முதலிய செய்யுட்களாற்றுதித்து மற்றும் சிவதலங்களைத் தரிசித்துவணங்கித் தண்டலைநீணெறியெனும் தலத்தையடைந்து அங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளின்படி "தண்டலையார்சதக" மென்னும் ஓர் சதகத்தையருளிச்செய்து அச்சந்நிதியிலரங்கேற்றிப் பல பரிசும்பெற்றுச் சிலநாளங்கு வசித்திருந்தனர். இதனிடையில் இப்புலவர் சிரோமணிக்கும், குடந்தையம்பதியில் கம்மியர்மரபினிற் றோன்றிய கும்பனென்னுமோர் புலவர்சிகாமணிக்கும் கல்வி விஷயமாகப் பலசமயங்களில் சம்வாதங்கள் நிகழ்ந்துவந்திருப்பதாக அறியக்கிடக்கின்றன. இவ்வழக்கு நமது நாட்டுக்கவிஞர்களெல்லாரிடத்துமே அமைந்திருப்பதைக் காணலாம். இது புலவர்களுக்கியற்கைபோலும். நிற்க.

இனி இப்புலவர்க்கும், கும்பனென்னும் புலவர்க்கும் அவ்வாறு நடந்த ஒரு சம்வாதத்தை இதன்கீழ்க் கூறுவாம்.

ஒருகாலத்தில் கும்பனென்னுங்கவி "மழவரங்கன்" என்னும் ஒரு பிரபுவுக்கு எழுதிய சீட்டுக்கவியில், படிக்காசுப்புலவரை,

கொஞ்சுகவியானையைவசைக்கவியெயிற்றினற்
குகவியுயிரான்மருட்டும்
குடிலகவிராஜசிங்கங்களைப்பங்கம் செய்
கும்பசரபத்தினேலை
செஞ்சிவிஜயாபுரிக்கோட்டைக்கபாடம்
திறக்கும்களிற்றுவேந்தன்
திறல்கொண்டலட்சுமணரங்கமழவேந்ர்துரை
ஜெயசௌர்யனினிதுகாண்க
வஞ்சியர்களிதயமும்கொஞ்சுபுரவியின் மனமும்
வல்லகவிராஜர்மனமும்
மகிமைபெறுமூர்த்திக்குமறிவரிது நின்சமுகம்
வருமுனேயறிசதுரர்
பஞ்சகவிகாலப்பயங்கரன்றெண்டமான்
பதியிலவமானமாக்கிப்
பஞ்சலட்சணமெனுங்கசைகொண்டடித்துப்
படிக்கனைமுடுக்கினேமே.

என வசைகூறி விடுத்ததைத்தெரிந்த படிக்காசர், ஷை சமஸ்தானத்திற்குத் தாம்வரைந்த சீட்டுக்கவியில்,

* கொல்லத்தமிழ்க்கவிசெலுத்திவாய் வீண்பெற்ற
    கும்பனெனுமொருதந்தியைக்
கொத்தியுண்மிழண்டபோண்டமென்னவரு
    கூர்படிக்காசனேலே
வல்லச்சிவந்தெழும்பல்லவன்றன்கருணை
    மாரிபோலேவழங்கும்
வாழ்வைக்கெடுக்கவருதென்குடந்தைப்பதிக்
    கொள்ளிவாய்ப்பேய்களல்ல
புல்லத்துரைத்தனமெனும்பனியினிடையிலே
    புகுபரிதிநிகரென்னவே
புகழ்கொண்டலட்சுமணராங்கமழுவேந்த்ராதுரை
    பூபனெதிர்கொண்டுகொண்க
* * * * * * *
* * * * * * *
என்பேரிலபசாரமுண்டுனைத்துதிசெய்ய
    எனைவரவழைத்திடுவையே.
என நிந்தித்தனர்.

இங்ஙனமாக இவ்விருபுலவர்களும் தாங்கள் பரிசுபெற விரும்பிச்செல்லும் சமஸ்தானங்கள்தோறும் விவகாரம் செய்துகொண்டே வருகிறகாலத்தில், கும்பன் இராமநாதபுரத்திலரசுபுரிந்த பெருங்கொடை வள்ளலாகிய ரகுநாதசேதுபதியைக்கண்டு தமது கல்வித்திறனைக்காட்டிப் பல்லக்குமுதலிய சம்மானம்பெற்றுத் திரும்புஞ் சமயத்துப் படிக்காசுப்புலவர் அச்சமஸ்தானத்திற்குவர இப்புலவரையும் மன்னர்பிரான் உபசரித்து வரவழைத்துக் கும்பனென்பவரின் கவிவன்மையைக்கூற அதுகேட்டுப் பொறுதபடிக்காசுப்புலவர்,

    ஏதையறிவானிவனுக்கேன்பல்லக்குச்
    சேதுரகுநாதசிங்கமே—ஓதுகின்ற
    * கச்சைக்கும்பச்சுரைக்காய்கறிக்காமோவதுபோல்
    தச்சக்கும்பன்சொல்.

என ஓர் வெண்பாவிலிழித்துக் கூறினரென்ப.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

---

* இப்பாட்டுக்கள் சிதைந்துள்ளன.

# DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

## விவசாயக் குறிப்புக்கள்.

### I

### கோயம்புத்தூரிலிருக்கும் விவசாய பாடசாலை

இந்த விவசாயபாடசாலை கோயம்புத்தூர்ப்பட்டணத்திற்கு மேற்கே மூன்றுமைல் தூரத்தில் தெலுங்குபாளையம் கிராமத்திலும் குமரபாளையம் கிராமத்திலும் ஸ்தாபித்திருக்கிற சர்க்கார் பண்ணையிலிருக்கிறது இந்தப்பண்ணையின் விஸ்தீர்ணம் தெலுங்கு பாளையத்தில் 400-ஏகராவும் குமரபாளையத்தில் கிருஷ்ணம்பதி ஏரிப்பாய்ச்சலுள்ள 50-ஏகரா நன்செய்நிலமுமுள்ளது. புன்செய்நிலங்களின் மண் கரிசற்காடும் செம்மண்ணுமானது. செம்மண்நிலம் அனேகமாய் கிணறுகளால் நீர் பாய்ச்சப்படுகிறது.

இந்த விவசாய பாடசாலையின் கருத்து இந்துதேசத்து விவசாயத்தைச் சீர்திருத்துவதுதான். அப்படிச் சீர்திருத்துவதின் முக்கிய அம்சங்களாவன :—

1. நிலச்சுவான்களின் பிள்ளைகளை விவசாயவிஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்தல்.

2. விவசாயவிஷயங்களை விவசாய பாடசாலையின்வழியாய்ப் பரவும்படி செய்தல்.

3. சிறுவர்களுக்கு விவசாய சாஸ்திரங்களைக்கற்பித்து அவர்களைத் தங்கள் சொந்தநிலங்களுக்காவது மற்றவர்களுடைய நிலங்களுக்காவது மானேஜர்களாகத் தகுதியுள்ளவர்களாக்குதல்.

விவசாயபாடசாலையின் மாணுக்கர்கள் மூன்றுபிரிவாகப் பிரிக்கப்படுகிறார்கள். அதாவது, முதல் வருஷத்து மாணுக்கர்கள், இரண்டாம் வருஷத்து மாணுக்கர்கள், மூன்றும் வருஷத்து மாணுக்கர்கள் வழக்கமாய் மாணுக்கர்களை செஷன் ஆரம்பமாகிய ஜூன்மாதத்தில் பாடசாலையில் சேர்ப்பார்கள்.

முதல் வருஷத்து மாணுக்கர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்கள், விவசாயத் தொழில்களுக்கு ஆதாரமாகிய விவசாய சாஸ்திரங்கள்; அவையாவன :—

1. ரசாயன சாஸ்திரம் (கெமிஸ்டிரி)

2. தாவரசாஸ்திரம்- அதாவது புல், பூண்டு, செடிகளைப்பற்றிச்சொல்லும் சாஸ்திரம் (பாடனி)

3. தத்துவசாஸ்திரம் அல்லது ஜடசாஸ்திரம் (Physics) அதாவது இந்த உலகத்திலுள்ள சட்டங்களைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரம்.

4. பூகோளத்தின் இயற்கை சாஸ்திரம்--அதாவது பூகோளத்தின் மேலுள்ள நிலம், நீர், ஆகாயம், காற்றுவீசுதல், சமுத்திரம், ஜீவஜந்து முதலியவைகளைப்பற்றியும் உலகத்திலுள்ள அனேக சாரங்களைப்பற்றியும் சொல்லும் சாஸ்திரம்.

5. சிற்றுயிர்நூல் (Entomology), அதாவது சிறு உயிர்களாகிய பூச்சி, புழு முதலியவைகளைப்பற்றி சொல்லும் நூல்.

மேலும் விவசாயவேலையில் பிள்ளைகளைப் பயிற்சிசெய்யும்படி செய்கிறார்கள். இன்னும் பரிசோதனைக்காகவும் ஊர்களில் உபயோகப்படுத்துவதற்காகவும் அப்போதைக்கப்போது விவசாய டிபார்ட்மெண்டார் கொண்டுவரும் அனேகவித விவசாயக்கருவிகளின் உபயோகத்தைப்பற்றியும் மாணுக்கர்களுக்குக் கற்பிக்கிறார்கள்.

மேற்கூறிய சாஸ்திரங்களைக்கற்பிப்பதில் அந்த சாஸ்திரங்களில் சொல்லியவைகளைச் சாதனப்படுத்தும்படி செய்கிறார்கள். இப்படிக் கற்பிப்பதால் மாணுக்கர்கள் சாஸ்திரங்களிற் சொல்லியவிஷயங்களைத்தாங்களே திருஷ்டாந்தமாகச்செய்து பார்வையிட்டு அவ்விஷயங்களை அறிந்துகொள்வார்கள்.

இரண்டாவது வருஷத்தில் மாணுக்கர்களுக்கு விவசாயத்தொழிலுக்கு வேண்டிய தாவரசாஸ்திரத்தைக் கற்பிப்பார்கள். மேலும் சிற்றுயிர்நூலையும் கற்பிப்பார்கள். சிற்றுயிர்கள் பயிர்களை நாசஞ்செய்வதைத்தடுக்கும்படியான விஷயங்களையுங் கற்பிப்பார்கள். இந்த

வருஷத்தில் சரியான விவசாயத்தொழிலைக் கற்றுக்கொள்வார்கள். அதாவது ஒவ்வொரு மாணுக்கனும் ஒருதுண்டு நிலத்தைத் தானே உழுது பயிரிடுவான். மேலும் விவசாயயந்திர மராமத்துவிதிகளையும், நிலவளவை விதிகளையுங் கற்பிப்பார்கள்.

மூன்ருவது வருஷத்து மாணுக்கர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்களாவன :—

1. விவசாயம்.

2. விவசாயயந்திர மராமத்து விதிகள்.

3. விலங்கின்நோயை ஆற்றுதற்குரிய சாஸ்திரத்தில், மிருகங்களின் சாதாரண நோய்களைப்பற்றியதும் அந்நோய்களைத்தீர்க்கும் விதிகளும்.

விவசாயத்தொழிற் பயிற்சியில் ஒவ்வொருமாணுக்கனும் தானே ஒருதுண்டுப் புலனைப்பயிரிட்டுப் பயிரிடும் விஷயங்களையெல்லாம் அப்போதைக்கப்போது பயிரிடும் குறிப்புக் காகிதத்தில் எழுதிவைத்துக் கடைசியில் தான்பயிரிட்ட நிலத்தில் பயிரிடுவதாலுண்டாகும் லாபநஷ்டத்தைத் தெளிவாயெழுதி பண்ணைத்தலைவருக்கு அனுப்ப வேண்டியது.

மாணுக்கர்கள் வசிப்பதற்கு விவசாய காலேஜுக்கு அருகிலேயே பத்து உறைவிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லிடத்தும் ஆறுபேர் வசிக்கும்படி ஆறு அறைகள் கட்டியிருக்கின்றன. இவ்வாறு அறைகளுக்கும் ஒரே சமையலறையும் போஜன அறையுமுண்டு. இப்படிப் பத்துஜாதி மாணுக்கர்களுக்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் இல்லிடத்திலுமுள்ள ஆறுமாணுக்கர்கள் ஒன்றுசேர்ந்து ஒரேசமையற் பாத்திரங்களையும் சமையற்காரனையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

மாணுக்கர்களிடத்திலிருந்து அவர்களைக் கற்பிப்பதற்கும் அவர்கள் இல்லிடங்களில் இருப்பதற்கும் கட்டணம் வசூல்செய்வதில்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய உணவு முதலியவற்றிற்குவேண்டிய செலவைக் கொடுக்கவேண்டும். இந்தச்செலவு அவரவர்களுடைய

வேண்டுகோளின்படி வித்தியாசப்படும். ஆனால், மாணாக்கரெல்லாம் ஒன்றுசேர்ந்து வசிக்கும் விஷயத்தில் மரக்கறிப் பதார்த்தம் சாப்பிடுவோர்களுக்கு மாதத்திற்கு ஒருவனுக்குப் பத்து ரூபாய்க்கு அதிகப்படாது. எண்ணெய் ஸ்நானத்திற்கு வேறேபணம் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணாக்கனும் பாடசாலையோடு சேர்ந்திருக்கும் தேகப்பயிற்சி சங்கத்திற் சேரவேண்டும். இந்தச்சங்கத்துக்குப் பிரவேச கட்டணம் வருஷத்திற்கு ரூபா மூன்று. சமாசாரப்பத்திரிகைகள் வாங்குவதற்கும் வாசக்கூடம் வைத்திருக்கவும் ஒரு மாணாக்கர்களுடைய சங்கம் ஸ்தாபித்திருக்கிறது. அதற்கு வருஷ சந்தா ரூபா மூன்றாக நியமிககப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர்,
1908-ம்௵
அக்டோபர்மீ 16௳.

ஸி. ஜே. டப்பிளியூ. ஷெப்பஸன்,
விவசாய பாடசாலைத்தலைவர்.

## II.

## எலுமிச்சை "சாகுபடி."

தஞ்சாவூருக்கு அடுத்த ஐயம்பேட்டை என்னும் கிராமத்தில் எலுமிச்சை மிகுதியாகப்பயிராகிறது.

பூமி—எலுமிச்சைப்பயிருக்கு நல்லவடிகாலுள்ள வண்டல்பூமி சிரேஷ்டம்.

நாற்றங்கால்:—பூமியை இரண்டு அடி ஆழம் கொத்தி புழுதி செய்கிறார்கள். அதில் நன்றாய் மக்கின மாட்டு எருவை அதிகமாகப் போட்டு மண்ணுடன் கலக்கவேண்டும். மாசி (பிப்ரவரி—மார்ச்சு) மாதத்தில் மரத்தடியில் விழுந்திருக்கும் நல்ல பழங்களை அறுத்துக் காயப்படாமல் எடுத்தவிதைகளைக் கையில் ஒட்டாமலிருக்கும்படி கொஞ்சம் சாம்பலிற்புரட்டி, பின் விதைகள் காய்வதற்குமுன் தயார் செய்தபூமியில், 4-அங்குலத்துக்கு ஒருவிதையாக ஊன்றுகிறார்கள். பிறகு அந்த நாற்றங்கால்மேல், வாழைச்சருகுகளைப் போட்டு நாற்றங்கால் காயாமல் ஜலம் விட்டுவருகிறார்கள். களைகளைக் கையால் எடுத்து விடவேண்டும். கார்த்திகைமாதத்தில் கன்றுகள்சுமார் ஓர் அடிமுதல் இரண்டு அடி வரை வளர்ந்திருக்கும். இப்போது

இரண்டு அடிக்கு ஒரு கன்ருக விட்டு நடுவிலுள்ள கன்றுகளை ஜாக்கிரதையாய்ப்பிடுங்கி இவைகளுக்காக வெட்டி எருவிட்டு தயார் செய்யப்பட்ட பூமியில் இரண்டு அடிக்கு ஒன்ருக நடுவார்கள். வெய்யிற்காலமுழுவதும் செடிகள் காயாமல் ஜலம் இறைத்துவரவேண்டியது. இப்படி வளர்த்த மூன்றுவருஷத்துக் கன்றுகளை ஆழமாய்க் கொத்தி எருவிட்டுத் தயார்செய்தபூமியில் 15-அடிக்கு ஒருவரிசையாகவும் ஒவ்வொரு வரிசையிலும் 15-அடிக்கு ஒரு செடியாகவும், கார்த்திகைமாதத்தில் நடுகிருர்கள். இச்செடிகளுக்கு மத்தியில் கன்றுகள் மரமாகும்வரை வாழைப்பயிர்செய்வதுண்டு. செடிகள்வைத்த மூன்ருவது வருஷமுதல் பலன்கொடுக்க ஆரம்பிக்கிறது.

வருஷாவருஷம், தோட்டத்தைக் கொத்தி நன்ருய் மக்கின சாணம் எருப்போடவேண்டியது. அம்மாபேட்டையில் அநேகமாய் மார்கழிமாதத்தில் கொத்தி எருவிடுகிருர்கள். ஆவணி மாதத்தில் கொத்தி எருவிட்டால் மழையினுல் எருவின்பலன் நன்ருய்ப் புலப்படும். பிறகு மார்கழிமாதத்தில் ஒரு கொத்துமாத்திரம் போட்டால் புற்பூண்டு மடிவதுடன், பூமிதளர்ந்து ஈரம் காக்கும். சாணி எருவே உத்தமம். எலும்புத்தூள் பலனை விருத்திசெய்யும்.

கவாத்து:—செடிகளில் உலர்ந்த கிளைகளை அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாய்க் கத்தரித்துவிடவேண்டும். ஒவ்வொருசெடியிலும் பூமியிலிருந்து வரும் ஒன்று அல்லது இரண்டு பெரிய கிளைகளைமாத்திரம் விட்டுவிட்டு மிஞ்சிய உபகிளைகளை நீக்கிவிடவேண்டும். கொத்திவிடவும், பழம்பொறுக்கவும், காத்தோட்டத்துக்காகவும், செடிகளின்கீழ்க்கிளைகளை அதிகமாய் வைக்காமல் நீக்கி மேற்போகச் செய்வது உத்தமம். வெயிற்காலமுழுவதும் ஜலம் இறைத்துச் செடிகளைப் பாதுகாத்துவரவேண்டும்.

இப்படி ஜாக்கிரதையாய்த் தோட்டத்தை ஆதரித்துவந்தால் சராசரி ஒவ்வொரு செடிக்கும் 1000-முதல் 3000-பழம்வரை கிடைக்கும்.

பாலூர் முகாம்,<br>1908-ம் ளு செப்டெம்பர்மீ 23உ.

எஸ். சுப்ரமணிய அய்யர்,<br>மானேஜர்,<br>விவசாயப்பண்ணை.

## III.

## பாங்கு நெல்.

இது, சிலவருஷங்களுக்கு முன்னால் மத்திய மகாணங்களிலிருந்து இவ்விராஜதானிக்கு நூதனமாய்க் கொண்டுவரப்பட்ட ஒருவகை நெல். அது வெண்மையான நீண்ட அழகாயுள்ள மெல்லிய அரிசியுடையது. ஆகையால் அது நாகரீகம் மிகுந்த ஜனங்களின் போஜனத்துக்கு ஏற்ற அரிசியாகும். ஆனால் பாங்குநெல் லரிசியானது நீளமாயிருப்பதால், அதைக்குத்தி அரிசியாக்கும்போது மற்ற உருண்டை அரிசியினுடைய வகைகளில் உண்டாவதைப்பார்க்கிலும் அதிகமான குறுநொய் உண்டாகிறது. புழுங்கல் அரிசி குத்திச்சாப்பிடும் ஜனங்களுக்கோ இதனால் பாதகமில்லை. ஏனெனில் நெல்லை அவித்துக்குத்தும்போது அரிசி அதிகமாய் உடைந்து குறுநொய்யாவதில்லை. கார்ப்போகத்தில் சாதாரணமாய்ப் பயிரிடும் மற்ற வகைகளைப் பார்க்கிலும் இது மிகச்சிறந்தது. மேலும் அதில் கிடைக்கும் மேனியும் அதிகம். அது பக்கம்வைத்துக் கிளைத்து மூடுகட்டும் சுபாவம் அதிகமாயுடையது. ஒற்றைத்தனிமுதலாய் நட்டாலும், கலப்பாய் விதைத்தாலும் சிலாக்கியமான விளைவுதரத்தக்கது. காரில் பயிர்செய்தால் இது விளைவாக 4-முதல் $4\frac{1}{2}$-மாதம் வரை செல்லும். வடமலையாளம் ஜில்லாவில் முதற்போகம்நெல் சாதாரணமாய்ச் செப்டம்பர் அக்டோபர்மாதங்களில் அறுவடையாகும். அங்கே இந்தவகை விளைவுக்குவர 5-மாதம் சென்றபோதிலும், விசேஷமான பலனைக்கொடுக்கிறது. சம்பாவிளைச்சற் காலத்தில் (அதாவது திருநெல்வேலியில் பிசானம் மேல் கறையில் இரண்டாம்போகம்) இந்த வகை 4 முதல் $4\frac{1}{2}$-மாதத்தில் விளைவுக்குவரும். இந்தக்காலத்தில் தண்ணீர்த்தட்டு சம்பவிக்கக்கூடிய இடங்களிலும், ஆறுமாதப் பயிருக்குத் தண்ணீர் இறைப்பதில் நேரிடும் செலவு மட்டுக்குமிஞ்சினதாயிருக்குமிடங்களிலும், இந்த வகைநெல் சாகுபடிசெய்யத் தகுதியுள்ளது. மற்ற சாதாரணவகை நெற்பயிரைவிட இந்தப்பாங்கு நெற்பயிர், தண்ணீர்த்தட்டு அதிகமாய்த் தாங்குவதுமன்றி, அந்தந்தக்காலத்துக்குத் தக்கபடி மற்றவகைகளைப்பார்க்கிலும் சிலாக்கியமான மேனிதரும். ஆனால் பாய்ச்சல் ஆதாரங்களில் ஆறுமாதப் பயிருக்குப்போதுமான தண்ணீரிருக்கும்பக்ஷத்தில், இதைவிடச் சம

பாநெல்லையே பயிரிடுவது உசிதமாகும். சிறுபாத்திகளில் இந்த வகை நெல்லைப் பயிர்செய்து கேழ்வரகுப்பயிருக்குத் தண்ணீர் இறைப்பதுபோல், ஐந்துநாளைக்கொருதண்ணீர் இறைத்து, கேள்வரகுப்பயிருக்குச் செய்வதுபோலவே பருவம்செய்துவந்ததில் சிலாக்கியமான பலன் கிடைத்தது. இதனாலே இந்த வகைக்கும் நன்செய்யில் பயிராகும் மற்ற வகைகளுக்கும் தண்ணீர்த்தடையைத் தாங்கும் இயற்கையில் எவ்வளவு பேதமிருக்கிறதென்பது நன்றாய் வெளியாகும். ஜனவரி முதல் மேமீ வரையுள்ள வேனிற் காலத்தில் இது பயிர்செய்யத்தக்கதன்று, ஏனென்றால் அம்மாதங்களிற் பயிர்செய்தால் அது விளைவுக்குவர, ஜூன் ஜூலை மாதங்களில் சாகுபடிசெய்யும் பயிர் அறுவடையாகும் காலம்வரை செல்லும்.

H. C. SAMPSON,

*4th February* 1909. *Dy. Director of Agriculture.*

---

# தமிழணியிலக்கண வரலாறு.

(சென்ற பகுதித்தொடர்ச்சி.)

இவ்வீரசோழியத்தின் அலங்காரப் படலம் முழுதும் வடமொழியில் தண்டியாசிரியர் இயற்றியுள்ள காவ்யாதர்சத்தைத் தழுவியது. இது தண்டிசொன்ன,

"கரைமலி நூலின்படியே யுரைப்பன் கனங்குழையே" [1] என்பதனால் விளங்கும். இந்நூலாசிரியர் இங்குக்கூறியுள்ளபடி தண்டியென்றும் [2] தண்டிகளென்றும், [3] இந்நூலுரையாசிரியர் தண்டியாரென்றும் [5] கூறியிருப்பது வடமொழித் தண்டியையென்றற்குச் சிறிது மையமில்லை.

---

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | வீரசோழியம், | அலங்காரப்படலம், | செய்யுள் | 1. | | | |
| (2) | ,, | ,, | ,, | ,, 13, 20. | | | |
| (3) | ,, | ,, | ,, | 7. | | | |
| (4) | ,, | ,, | ,, | ,, | உரை. | ப. | 141. |
| | ,, | ,, | ,, | 9. | ,, | ,, | 144. |
| | ,, | ,, | ,, | 11. | ,, | ,, | 147. |
| (5) | ,, | ,, | ,, | 9. | ,, | ,, | 144. |

இனித் தமிழின் ஐவகை இலக்கணத்துள் அணியிய லொன்றனையே கூறுவதும் தமிழ்ப் புலவர்கள் பெரும்பான்மையு மெடுத்தாள்வதுமாகிய தண்டியலங்காரமென்னும் நூல் தோன்றிய காலத்தைச் சிறிதாராய முயல்வோம். இவ்வலங்கார நூலாக்கியோன் பெயரின்னதென்பது விளங்கவில்லை. நூலின் பெயர் தண்டியென்னும் பெயரொடு கூடியிருத்தலைக் கொண்டு இயற்றிய ஆசிரியர் தண்டியென்னும் பெயரினரென்று கொள்ளல் தகாதோவெனின் அங்ஙனங் கொள்ளற்கு இதனை யொழித்துச் சான்று வேறொன்றுமில்லாமையான் நூலாசிரியர் பெயர் தண்டியென்றே துணிதற்கியலாது. இந்நூலுக்குத் தண்டியலங்காரமென்னும் பெயரேயன்றி அணியிய லென்றொரு பெயருமிருப்பதாகத் தோன்றுகிறது. எங்ஙனமெனின் அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்தினுரையில் எடுத்துக் காட்டியுள்ள சில சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படுகின்றமையின் அவர் அணியியலென்று கூறியுள்ள நூல் இந்நூலின் மறுபெயராதல் வேண்டும்—என்று நினைக்க இடனுகின்றது. இவ்வணியியல் என்பது வேறோரலங்கார நூலின் பெயரென்று கொள்ளலமையாதோவெனின், அவ்வாறு கொள்ளலாமாயினும் அணியியலென்னும் பெயரைத்தவிர்த்து வேறொன்றும் அந்நூலைக் குறித்து நமக்குத்தெரிந்திலது. தண்டியலங்காரத்தின் உரைத் தொடக்கத்தில் “இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியினதிலக்கண முணர்த்தினமையின் அணியதிகார மென்னும் பெயர்த்து” என்று காணப்படுகின்றமையின் இதற்குப் பிறிதொரு பெயருமுண்டென்பது விளங்குகின்றது. இது வல்லாமல், அடியார்க்குநல்லார் அணியியலென்னும் நூலிலிருந்து இலக்கணமாகச் சூத்திரங்களை யெடுத்துக்காட்டியிருப்பதன்றிச் சில அலங்காரங்களின் பெயர்களையே கூறியிருக்கின்றார். அவையாவெனின், தெரிதரு தேற்றவுவமை, விரோதம், பின்வருநிலை, பரியாயம் என்பன. இவற்றை “மலையிடைப்பிறக்கு மணிகுறையாமையின் அதிற்பிறவாமணியே யென்பேனோ, அலையிடைப்பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற்பிறவாத அமுதே யென்பேனோ, யாழ் கட்கின்றாதலின் அதனிடைப்பிறவாத இசையே யென்பேனோ வெனத்தெரிதருதேற்ற வுவமையென்னு மலங்காரமும், மலைகட

லென விரோதமும், பின் வருநிலையென்னு மலங்காரமும் புலப்படுத்தினரென வுணர்க" வென்ற விடத்தும் "தயங்கல் வயங்கலிரண்டும் விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலைபாய ஏதுகைத்தொடை யின்பமும் புலப்படுத்தினமை யுணர்க"வென்ற விடத்தும் காண்க. 6 இங்கெடுத்துக் காட்டியுள்ள அலங்காரங்களின் பெயர்கள் தண்டியலங்காரத்தில் அவ்வவ்வணிகளுக்குக் கூறியுள்ள பெயர்களாயிருக்கின்றன. வீரசோழியத்தி னலங்காரப்படலத்துள் இவ்வலங்காரங்கள் பெரும்பான்மையும் வேறு பெயர்களாற் கூறப்பட்டிருக்கின்றன. தெரிதரு தேற்றவுவமை இந்நூலின்கண் துணிவுவமை யென்றும் 7 விரோதம் முரணென்றும் 8 பின் வருநிலை மீட்சி யென்றும் 9 பரியாயம் பரியாயமொழி யென்றும் 10 வழங்கப்பட்டிருக்கின்றன. தண்டியாசிரியர் தமது காவ்யாதர்சத்தில் இவற்றை முறையே நிர்ணயோபமா விரோதம் ஆவ்ருத்தி பரியாயோக்த மென்பர். ஈற்றிற் கூறிய அணி பரியாய மென்னும் பெயராற் காணப்படினும் பரியாய மொழி யென்பதே முதனூலினுள்ள பர்யாயோக்த மென்பதன் நேரான மொழிபெயர்ப்பாகின்றது. ஆயினும், வீரசோழிய வுரையாசிரியர் இலக்கணங்காட்டியுள்ள இடத்தில் இவ்வலங்காரம் பரியாய மென்றும் 11 காணப்படுமாதலின் இவ்வொன்றனையு மொழித்து ஏனையணிகளின் பெயர்களை யாராய்ந்து பார்ப்போம். பெருந்தேவனார் தமதுரையில் ஆங்காங்கு அலங்காரங்களுக்கு மூலத்திற் கூறியுள்ள பெயர்களேயன்றி அவற்றுக்குரிய வேறு பெயர்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அங்ஙனம் அவர் காட்டியுள்ளவற்றிலும் துணிவுவமை முரண் மீட்சி

(6) சிலப்பதிகாரம், மனையறம்படுத்தகாதை-உரை, அடி 75-83.
(7) வீரசோழியம், அலங்காரப்படலம் செய்யுள்—14.
(8) „ „ „ 12, 31.
(9) „ „ „ 10.
(10) „ „ „ 12, 28-28 செய்யுளில்' இவ்வணி பரியாயமென்றுங் காணப்படுகின்றது.
(11) „ „ „ 12-உரை, 28செய்யுளினுரையில் இவ்வலங்காரத்துக் கிலக்கணங் கூறியுள்ள விடத்தில் உரை யாசிரியர் பரியாய மொழியென்றே கூறியிருக்கின்றார். 31-செய்யுளினுரையில் இவர் "முரணெனினும் விரோதமெனினு மொக்கும்" என்று கூறியிருப்பினும் இந்நூலின்கண் முரணென்பதே பெரும்பான்மை வழக்காகின்றது.

*

யென்பவற்றுக்கு வேறுபெயர்களாகத் தண்டியலங்காரத்திற் கூறியிருக்கும் தேரிதருதேற்றவுவமை முதலிய பெயர்கள் காணப்படவில்லை. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேறோரிடத்தமைத்துள்ள விரோத மென்னு மலங்காரத்தினை விரோதமென்று கூறியிருக்கிறாரே யன்றி முரணென்னும் பெயரானுதல் வேறுபெயரானுதல் கூறிற்றிலர். இதனைச் "செய்யகரியவனென்பது விரோதமென்னு மலங்காரம்" என்றவிடத்துக் காண்க.[12] ஆகலின் இவ்வுரையாசிரியர் அணியியலென்று கூறியுள்ளது, தண்டியலங்கார மென்றும் மேலெடுத்துக்காட்டிய அலங்காரங்களின் பெயர்களும் இவ்வணிநூலிலிருந்தே யெடுத்தாளப்பட்டனவென்றும் கொள்ள இடமுண்டு.[13] பரிமேலழகரும் தமது திருக்குறளுரையில் ஆங்காங்குச் சில பாக்களில் அமைந்திருக்கும் அலங்காரங்களை யெடுத்துக் காட்டியுள்ளார். இவர் காட்டியுள்ள அணிகளெல்லாவற்றின் பெயர்களும் தண்டியலங்காரத்திற் கூறியிருக்கும் பெயர்களல்ல. சில அணிகள் மட்டுமே இந்நூலிற் காணப்படும் பெயர்களைக் கொண்டனவா யிருக்கின்றன. அவை யாவையெனின் வடமொழிக்காவ்யாதரிசத்தில் தண்டியாசிரியர் ஆவ்ருத்தியென்றும் ஸமாஸோக்தி யென்றும் கூறியுள்ள அணிகளாகின்றன.

இவ்விரண்டணிகளையும் தண்டியலங்கார நூலாசிரியர் முறையே பின் வருநிலை, ஒட்டு என்னும் பெயர்களால் மொழிபெயர்த்திருக்கின்றனர். ஸமாசோக்தியைப் பரிமேலழகர் பிறிதுமொழிதலென்பர். ஆயினும் பிறர்மதமாக அவர் இதற்கு வேறு பெயர்களும் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். இதனை "...இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம்: இதனை நுவலா நுவற்சி யென்பாரும் ஒட்டென்பாருமுளர்" என்றவிடத்துக் காண்க. இவ்விரண்டு மறுபெயர்களி

(12) சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை, படர்க்கைப்பரவல் 2 பரை.

(13) செந்தமிழ் என்னும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பத்திரிகையின் முதல் தொகுதி முதற் பகுதியின் உள்ளுறையுள் ஒன்றாகிய நேமிநாதத்தின் உரையிற் "புனையுறு செய்யுட்பொருளை யொருவழி, வினைநின்று விளக்கினது விளக்கெனப்படுமே," "முதலிடை கடையென மூவகையான" என்பன அணியியல் ஆகலின்? என்றவிடத்து உரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ள சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படாமையால் அணியியலென்பது வேறோரலங்கார நூலாயிருத்தல் வேண்டுமென எண்ண இடமாகின்றது.

லொன்றாகிய ஒட்டென்பது தண்டியலங்காரத்தின்கண் ஸமாசோக்திக்கு வழங்கியிருக்கும் பெயர்.

காவ்யாதர்சத்திற் கூறியுள்ள இலக்கணத்தில் ஸமாசோக்திக்கும் (ஒட்டு) அப்ரஸ்துதப்ரசம்சைக்கும் (மாறுபடு புகழ்நிலை) பிறிதொன்றைக் கூறக்கருதிய பொருள் புலப்படுதலாகிய ஒற்றுமைகாணப்படுகின்றது. சந்திராலோகமுடையார் இவற்றுக்குக் கூறியுள்ள இலக்கணத்தில் இவ்வலங்காரங்களுள் இத்தன்மைத்தாகிய ஒற்றுமையின்றி வேற்றுமையே தோன்றுகின்றது. எவ்வாறெனின், ஸமாஸோக்தியென்னும் அணியில், ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுகின்றது; அஃதாவது, கவிகருதிய தொருபொருளைச் செய்யுளகத்துக்கூற அதனுட் பிறிதொருபொருள் தோன்றுதலாம். அப்ரஸ்துதபிரசம்சையிலோவெனின், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம் புலப்படுகின்றது; அஃதாவது கவி பிறிதொருபொருளைக் கூறக்கருதிய பொருள் தோன்றுதலாம். இவ்வடமொழியலங்கார நூலாசிரியர்கள் ஸமாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்சைக்கும் கூறியுள்ள இலக்கணங்களிற் காணப்படும் வேறுபாடு உய்த்துணரற்பாலது. சந்திராலோகமுடையார் ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுதலும், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம் புலப்படுதலும் முறையே ஸமாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்சைக்கும் இலக்கணமென்பர். [14] தண்டியாசிரியரோவெனின், கருதிய பொருளைத் தொகுத்து அதற்கு ஒத்ததாகிய பிறிதொருபொருளைக் கூறக்கருதியபொருள் புலப்படுவது ஸமாஸோக்தியென்றும் பிறிதொருபொருளைப் புகழ்ந்து கூறக் கருதிய பொருளிற் பழிப்புப்புலப்படுதல் அப்ரஸ்துதப்ரசம்சையென்றும் கூறுவர். [15] கருதிய பொருளைத் தொகுத்துக்கூறலின் ஸமாஸோக்திக்குத் தொகைமொழி [16] யென்றும் ஒரு பெ

---

14 𑌸𑌮𑌾𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑍇𑌽𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑍍 ।
𑌅𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 ॥

(15) 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 ।
𑌉𑌕𑍍𑌤𑌿𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌾 𑌸𑌮𑌾𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌯𑌾 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 ॥

(16) வீரசோழியம் அலங்காரப்படலம் செய்யுள் 11-உரை.

யருண்டு. வீரசோழிய நூலாசிரியர் இவ்வணியினைச் சுருக்கு என்பர்.

பரிமேலழகர் எடுத்துக்காட்டியிருக்கும் அணிகளின் பெயர்களிற் பின்வருநிலையும் ஒட்டும் தண்டியலங்காரத்திற் கூறியுள்ள பெயர்களாகின்றன. 17 அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தின் உரையில் எடுத்துக்காட்டியிருக்கும் அணியிலக்கணச் சூத்திரங்கள் தண்டியலங்காரத்துட் காணப்படுகின்றனவென்று முன் கூறப்பட்டது. இவ்வுரையாசிரியர்கள் காலம் இன்னதெனவரையறுத்துக் கூறவியலாதாயினும் அதன் மேலெல்லையைச் சிறிதேறக்குறைய இன்னதெனக் காட்டலியலும். எவ்வாறெனின் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தினுரையிற் கலிங்கத்துப்பரணியிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றமையாலும், கலிங்கத்துப்பரணியென்னும் நூல் குலோத்துங்க சோழனைப்பற்றிக் கூறுதலின் அச்சோழன் அரசாண்டகாலத்துத் தோன்றிய நூலாதல் வேண்டுமாதலாலும், இவ்வரசன் ஆண்ட காலம் கி-பி. பதினொன்றும் நூற்றாண்டின் பிற்கூறும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகின்றமையாலும் இவ்வுரையாசிரியர் இந்தக் காலவரைக்குப் பின்னிருந்தவராதல் வேண்டும்.—(ஞானபோதினி.)

---

(17) பரிமேலழகர் பிறிதுமொழிதலென்னு மலங்காரத்துக்குப் பிறர் மதமாகக் காட்டியிருக்கும் நுவலாநுவற்சி யென்னும் பெயர் வீரசோழியத்தின் உரையிற் காணப்படுகின்றது. மூலத்திற்கூறியுள்ள நுவலாச்சொல் என்னும் அலங்காரத்துக்கு இதனை மறுபெயராகக் காட்டியிருக்கின்றார். காவ்யாதர்சத்திற் கூறியுள்ள அலங்காரங்களின் முறையை வீரசோழிய நூலாசிரியர் தழுவியிருத்தலால் நுவலாச்சொல் என்பது அப்ரஸ்துதப்ரஸம்சையின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுமாயினும் "மாறியிகழ்மொழி வண்புகழாய் நுவலாச்சொல்வரும்" (அலங்காரப்படலம் செய்யுள் 32) என்று இவர் இதற்கு இலக்கணம் கூறியிருத்தலால், இது வ்யாஜஸ்துதியாதும். பெருந்தேவனார் இதற்குப் புகழாப் புகழ்ச்சியென்னும் ஒரு பெயருங் கொடுத்திருக்கிறார். இதுவே தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்குக் கூறியுள்ளபெயராகும். "தேறுந் தெரிவில் புகழ்ச்சியொன்றைப் பழிக்கப்பிறிது கூறிப் புகழுதல்" (அலங்காரப்படலம், செய்யுள் 32) என்ற இலக்கணத்தால் தெரிவில் புகழ்ச்சி யென்பது அப்ரஸ்துதப்ரஸம்ஸையாகின்றது.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]
(முற்றொடர்ச்சி.)

(௩சகூ) வேதம்பொருளாயுள்ள சிவபெருமானுக்கு விட்டுணுவும் பிரமாவுங்காணாத உண்மையையும், வெண்ணாவலுண்மையையும் திருமயேந்திரத்திலும், திருக்கயிலையிலும், திருவாரூரிலும் பொருந்திய பண்பையும், திருவானைக்காவிலே புகழ்ந்துபாடி.

(௩ருஉ) சிவபெருமானுடைய அருளின் வண்ணத்தை அடியாரிடத்தே பெருமையோடு கேட்டருளி.

(௩சுக) கூட்டமான சோலைசூழ்ந்த முள்ளையுடைய தாமரை அடவிவழியேபோய்.

(௩சுஉ) அக்கரைப்பரமர்பால் - எலும்பை அரையிலணிந்த சிவபெருமானிடத்தே.

(௩எக) பெறவகன்று - பெறும்படி அகன்று.

(௩எஉ) வந்துமுல்லைப்பந்தரின் மணங்கமழ்கின்ற.

(௩அஉ) பொருந்திய விருப்பத்தினால் திருஞானசம்பந்தப்பிள்ளையாரானவர் தம்மனத்தை விளைவும் பதிகம்.

(௩அரு) உலகிலுள்ளோர் நாடோறும், குளிர்ந்தநீரிற் படிந்துவருகின்ற தென்றலையும், நறியசந்தனக்குழம்பையும், பண்புமிக்க வாசனைபொருந்திய மென்மலரையும், மிகுந்த பனிநீரையும், நண்பையுடைய துணையாகிய சந்திரனையும், முத்தணியையும், உண்பனவாகிய மதுரித்தசுவையையும் விரும்ப.

(௩அகூ) நீர்வற்றினமையாற் கருமணல்மிகுகின்ற கானயாற்றில் நீர்வேட்கையிலணைகின்ற மான் பெறற்கரிய நீரென்று பேய்த்தேரின்பின்னரேதொடரும்; மழைத்துளியையுணவாக்கொள்கின்ற வானம்பாடிகள் தேம்ப, வயலில் இரையையாராயும் பறவை சிறையைவிரித்துப் பின் அச்சிறை ஒடுக்கக்குளிர்ந்த இடத்துத்தங்கும்.

(௩௮௮) குயிலானது ஒடுங்காத சோலையிலுள்ள மென்றளிரைக் கோதிக்கூவியெழ.

(௩௯௧) பிறவி சுற்றுப்பக்கத்திலுமடையாமல் உதவிபுரிவோருடைய.

(௩௯௭) வெள்ளெயிற்றுப்பன்றி.

(௪0௭) சேர வருவாராய்.

(௪0௯) பொலிவுபொருந்திய கங்கைமுதலான சுத்தமாம்பெருந்தீர்த்தங்கள் மாமகத்திலே தம்மிடத்துள்ளபாவம் நீங்கவந்து பிரதக்கிணஞ்செய்தணைந்து.

(௪௧௨) பெருமைபொருந்திய பாம்பு அருச்சித்த.

(௪௧௮) மூலத்தேவர் - ஆதிகாரணர்.

(௪௨0) நீணிலையாயுள்ளன பக்கத்தேசூழ்கின்ற திருமாளிகை

(௪௨௨) விரும்பியங்கிருக்கும் நாளில்.

(௪௨௩) சீகாழித்தலைவர் முன்னாளிலே மொழிந்தமையைநினைந்து அருளைத்தியானித்து; முன்னாளில் மொழிந்ததென்றது, சிவபாதவிருதயர் யாகஞ்செய்தற்குப் பொன்வினவியபோது இன்னுஞ்சிலகாலம் எந்தையீர் என்னுடன் யாத்திரைசெய்து பின் யாகஞ்செய்யலாமென்று கூறினமையை.

(௪௨௫) நாலடியின்மேல் இருசீர்தொடுத்தவைப்பு -நாலடிமேல்வைப்பு.

(௪௨௯) அச்சிறப்பருள்பூதம் - முத்துப்பந்தரை முன்னருளியபூதம்.

(௪௩0) நன்று - பெரிது.

(௪௩௫) சொல்லப்பட்ட ஆறறிவையுடையோரை. அடியார் விண்ணப்பஞ்செய்தபடி அறிந்துசெய்பவரை என்றுமாம்.

(௪௪௪) அச்சுற்றத்தாருக்குக் கூறுபவராகிய பெருமையையுடைய பெரும்பாணர், ஆளுடையபிள்ளையாரருளிச்செய்த அரியபதிகங்களைத்தாம் யாழால் பயிற்றும் பேற்றை அருளிச்செய்தார்.

(௪௪௬) அளவிறந்த திருப்பதிகவிசையானது யாழில் அளவு படாவகையை, இவர்களேயன்றி உலகத்தோரும் உண்மையினை அறிந்தீடேற உணர்த்தும் பண்போடு பலரும்புகழ்கின்ற திருப்பதிகம் பாடியருளப்பெறின், குணநீடிவிளங்கும் இசை, யாழிலடங்காமையை யான் கட்டப்பெறுவேன்.

(௪௪௭) திருப்பதிகத்துண்மையானது பூமியிலுள்ளோருடைய கண்டத்திலும், யாழிலும், பூமியில் இசைநூல்கூறின பேதமான நாதத்தையுடைய இசைமுயற்சிகளால் அடங்காதவகையைக் காட்டுகின்றாராய்.

(௪௪௮) இந்தப் பெரியோரருளிச்செய்த திருப்பதிகத்திசையை யாழில்வாசிப்பேனெனக்கூறியது இவ்வியாழை நான்முறுடுதலினன்றோ.

(௪௫0) அங்கதனைப்போக்க ஓக்குதலும்- அதனை உடைக்கும்படி ஓங்குதலும்.

(௪௫௪) பாசடைப்பங்கயத்தடஞ்சூழ் - பசிய இலையையுடைய தாமரைத்தடாகஞ்சூழ்ந்த.

(௪௫௫) அடியார்கூட்டம் விரும்பிச்சென்றுஇசைந்தவழியில்.

(௪௫௬) உருகிய அன்புபொருந்தியகாதலால் மனமுருகி நனைஈரத்தைப் பெற்றாற்போலப் பொருந்தியதிருமேனியெல்லாம் முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகமானவை மயிரை வளர்க்கின்ற நீரினாலே.

(௪௫௭) யாழ்நரம்பிலே பொருந்த இயன்றஇசை கூடப்பாடி அளவிறந்த கற்பங்களுக்கு நெடிதாய் அளவுபட, யாழிலிட்டு வாசிக்கப் பாலறுவாயாருள் செய்தபொழுது.

(௪௬௧) கங்கைஒழுகும் செவ்வானம்போன்ற அந்திக்காலத்திளம்பிறையையணிகின்ற சடையையுடையாருக்குமுன் நமஸ்கரித்தெழுந்து.

(௪௬௪) இளமையான பூங்கொம்புபோன்ற உமையம்மையுடன், நீதியாய்நிகழ்கின்ற நீலநக்கநாயனாருடைய பெருங்கீர்த்தியை அப்பதிகத்தில் விளங்கவைத்து.

(௬௬௫) நண்புடையடிகள் - திருநீலநக்கநாயனர். உள்ளமுடையவர் - திருநீலநக்கநாயனர்.

(௬௬௭) கழியையுடையகானல். கழியையுடைய ஒளிபொருந்திய.

(௬௭௦) தங்கள் பெருந்தகையாரை - தம்பெருமானரை.

(௬௭௧) மாமாத்தியப்பிராமணருடைய போரையுடைய சிங்கேற்றின்.

(௬௭௪) குணம்பொருந்திய இடியேற்றையும், கலுழனையும் போன்ற மாந்திரிகர்கள்.

(௬௭௭) வந்துஅடைந்த பாலகராய மார்க்கண்டேய முனிவருடைய உயிரின்மேற்சீறிவரும் யமனுடைய பாந்தஞ்சின் சூழ்வுபோன்ற சிவந்த வன்கண்ணையும் வெள்ளியபற்களையுமுடைய கரியகோலம்.

(௬௮௦) எம்பெருமானே! என்பிதாவளம்பொருந்திய சோலைசூழ்ந்த வைப்பூர்க்கதிபனுகிய தாமன்; அத்தாமனுக்கிவன் மருமகன்; அவனுக்குப் புதல்வியர் நல்லஇளமையான பெண்யானைகள்போன்ற எழுவர்; அவரின் மூத்தாளை இவனுக்கென்று கூறிவைத்து, அன்னியனுக்கு மனங்களிப்புமிகச் செல்வத்தைப்பெற்றுக்கொண்டு விவாகஞ்செய்துகொடுத்தான்; என்னையொழிந்த ஏனையரையும் அவ்வாறே இவனுக்கென்றுவைத்துப் பொருள்பெற்றுக்கொண்டு அந்நியருக்கு விவாகஞ்செய்துகொடுக்க, அதனல் தளர்ந்தொழியும் இவனுக்காக அன்புசெய்து அப்பிதாமாதாக்களுக்கு மறைந்து இவனையே சார்ந்துவந்தேன்.

(௬௮௧) நல்கும்படிபற்றிய கொலைத்தொழில் பொருந்திய சருப்பத்தின்விடம் நீங்குமாறு வயல்சூழ்ந்த திருமருகலிலுள்ள சிவபெருமானை.

(௬௮௨) கண்டசசி மௌலியானை - இளம்பிறையைத்தரித்த சடையையுடையவரை. வேதியன் - வேதத்தையுடையோன். கண்டச்சசி - துண்டமதி.

(௬௮௩) உலகத்தார் முன்னரே அங்கீகரிக்கும்.

(௬௯௦) கண்ணீர் அருவியைச்செய்ய.

(சகஞ) யாமுமிங்கணையப்பெற்ற பேரருளுடையேம். செப்பிய வளவிய "முத்துவிதானமணி" என்கின்ற பதிகத்தினலே திருவாதிரைச் சிறப்பைக் கூறினர்.

(சகஅ) கொத்துக்களையுடைய மலர் பொருந்திய சோலை.

(ருoக) உவமையில்லாத.

(ருoஉ) கத்தூரி புழுகு ஆகிய பெருஞ்சோற்றில் நறிய சுத்தமான வாசனை பொருந்திய சுண்ணஞ் சொரிதலினல் சுடர் பொருந்திய ஒளிகளின் வரிசையான வீதிகள் காலை இழுக்கியஅவை கரைந்து அலையப்பூவானது தேன்மாரியை நீர்மழையைப்போற் பொழிந்தது.

(ருoங) மாடம், மாளிகை, மண்டபமாகிய இவைகளின் பக்கங்களினெல்லாம் புடைவைக்கொடிகளும், அழகிய கூந்தலையுடைய பெண் கொடிகளும் ஆடல் நீடுவன; வண்டுகளோடு பொற்குடங்கள் தோட்டைச்சூழ்வன; வாழைதோரணம் நிரையான கமுகு காட்டின் தன்மையைக் கொண்டன. ஆடல்முறையே அசைதலும், நாட்டியஞ் செய்தலுமாம். தோடுமுறையே இதழும் பூமாலையுமாம்.

(ருoச) பவளவேதிகைகளிலுள்ள பூம்பந்தரானவை, மாலை சூழ்ந்த புறவிடங்களிலுள்ள அழகிய நிரையான விளக்கின் அழகு மிக்க ஒளியோடு, கோத்திடையிலேதூக்கப்படும் கரியநீலமணியினிழல் பொரப், புகர்திறம் உண்டாகும் பான்மையவாயின.

(ருoரு) மங்கலதூரியங்கள், தேவர்குழாமும் விரும்புஞ்சிறப்பினவாய, இதழ்களையுடைய மலர்கள் பொருந்திய விசாலித்த சாலைகள் திண்ணைகள் நாற்சந்திகள் குண்டலத்தை அணிந்த முகத்தையுடைய பெண்கள் நடிக்கு மரங்குகள் ஆகிய இவைகளினெல்லாம் நெருங்கி. காதிலணிந்த குண்டலம் முகத்தையே அலங்கரித்தலின், அப்பயன்பற்றி, முகத்திலணிந்த குண்டலமென்னும் பொருள்படக் குழைமுகத்தவர் என்றார்.

(ருoசு) புரிசனங்கள் - நகரியிலுள்ள சனங்கள்.

(ருoகூ) தன்னுளெவ்வகைப்பட்ட பெருமையையும் தாங்குந்தகைத்தாகிய பல நெடிய சுடர்வரிசைப்பரப்பினைப்பார்த்து.

*

(ரு௨க) பூவாற்பொலியும் நீர்வளஞ்செறிந்த சீகாழியிலுள்ளாருடைய யானைக்கன்றினெதிரே வணங்கி.

(ருநஉ) கலயர் - குங்குலியக்கலயநாயனார்.

(ருநந) வேதத்தையறிந்த பெருமையையுடைய குங்குலியக் கலயநாயனாரும்.

(ருநச) மூங்கிலைப்போல விளங்குகின்ற கரும்போடு செந்நெற்களையுடைய வயல் செறிந்த மருதநிலத்தை நீங்கி.

(ருநரு) அப்பொழுது சிவபெருமானால் அடிமைகொள்ளப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரை எதிர்கொண்ட, மெய்ம்மையான பெருமையையுடைய அந்தணர்களது சீகாழியில் வாழ்கின்ற திருஞானசம்பந்தப்பிள்ளையார். எப்பரிசினாலேயோ.

(ருசஉ) ஆளுடைய பிள்ளையார் கைத்தாமரையைச் சிரமேற்கொண்டு அப்பொழுது "அரையார் விரிகோவணவாடை" என்பதை முதலாகவுடைய உவமைசொலற்கரிய பதிகத்தினுயர்ந்த இசையைப்பாடி, விட்டுணு உண்மை ஞானத்தாற் சாத்திய கண்ணாகிய பூவை விரும்பின சிவபெருமானுடைய கோயிலையடைந்தார்.

(ருசந) திருநாவுக்கரசு நாயனாருடனேவர விண்ணிழிவிமானத்தைப் பிரதக்ஷிணஞ்செய்யுமவர், விட்டுணுவணங்கப் பூமியில் இறங்கிய தெய்வத்தன்மை பொருந்திய திருவுருவைத் தரிசித்து.

(ருசரு) மிகுந்த நீர்வளத்தாலெவரும் பேணுகின்ற.

(ருருக) ஆளுடைய பிள்ளையாரை முதலாகக்கொண்டு ஏழிசையைச் சூழுமந்தணரையடைந்து.

(ருருச) மேன்மைபொருந்திய திருவீழிமிழலையந்தணர்கள் சீகாழியிலந்தணர்க்காய விருந்தைக்கொடுப்ப, உடன்பட்ட மனத்தையுடையராய் விரும்பிச் சிவபிரானைப் புகழுஞ் சிறந்த எல்லை இனிதாய்க்கழிய சீகாழியிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் தாமே முகில்போன்ற கொடையையுடைய அழகிய கையையுடைய திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

# கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

"கவிச்சக்கரவர்த்தி"யென அடியார்க்குநல்லாரால் புகழப்பட்ட சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியின் அருமைபெருமைகளை அறிஞரெல்லாம் அறிந்திருப்பர். இப்பரணி, அபயன் என்னுங் குலோத்துங்கசோழன், கலிங்கத்தடைந்த பெருவெற்றியைப் புகழ முகத்தானே, அச்சோழன் பெருமையையும் இது பாடிய சயங்கொண்டார் பெருமையையும் நிலவுலகில் நிலைபெறச்செய்வதாகும். இது பாடிய புலவர்பெருமானது ஊர், திருவாரூர்ப்பக்கத்ததும் ஜைனகிராமமுமாகிய தீபங்குடி என்பது,

"செய்யும் வினையு மிருளுண் பதுவுந் தேனுங் நறவும் மூனுங் களவும்
பொய்யுங் கொலையும் மறவுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழும் விழியுங் காலுந் நிறமும் போலுங் கமலங்
கொய்யும் மடவார் விழிவா யதரங் கோபங் கமழுந் தீபங் குடியே."

என்னுந் தமிழ்நாவலர் சரிதைப்பாடலால் தெரிந்தது. இப்பரணியைப்பாடிய சயங்கொண்டார்க்குச் சோழன் வேண்டிய சிறப்புகளைச் செய்திருக்கக் கூடுமாயினும், அவ்வரசன் தானளித்த வரிசைத்திறத்தைப் பெரிதாகப் பாராட்டியபோது, இப்புலவர், சினத்துடன் கூறியதாகக் கருதப்படும்—

"காவல ரீகை கருதுங்கால் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை அபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான்."

என்னும் அழகிய பாடலொன்றும் அச்சரிதையிற் காணப்படுதல் அறிந்துமகிழத்தக்கது. இப்புலவர் பெருமானையடுத்து அபயன்மகன் காலமுதல் விளங்கிய ஒட்டக்கூத்தர், தாம்பாடிய தக்கயாகப்பரணியின் முடிவிலே, கலிங்கத்துப்பரணியைத் "தெய்வப்பரணி" என்று புகழுவரென்றால், அதுபாடிய சயங்கொண்டார்பெருமை சொல்லுந்தரத்ததோ! இதனை,

"செருத்தந் திரிந்து கலிங்க ரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணி கொண்டு
வருத்தந் தணிந்துல காண்ட பிராஅன்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே."—என்பதனாலறிக.

இக்கலிங்கத்துப்பரணி, இக்காலத்துப் பலபதிப்புப் பெற்றிருக்கிறது. இப்பதிப்புக்களில், பலவிடங்கள் பொருள் செவ்வனேபுலப்படலின்றிக் காணப்படுகின்றன. இதனால், கம்பரிராமாவதார முதலியன போல, இந்நூலும் பிற்காலத்திற் பாடங்கள் பிறழ்ந்துஞ் சிதைந்தும் போயிருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதுபற்றி, இச்சங்கத்திருந்த மிகப்பழைய பரணியேடொன்றை ஆராய்ந்துவரும் போது, பல அரிய பாடங்களும், வேறுசில புதியபாடல்களும் காணப்பட்டன. இப்பாடங்கள் அப்பரணியிலுள்ள சந்தேகங்களை ஒருவாறு நீக்குதற்குரியனவாயிருத்தலால், அதனை முழுதும் பரிசோதித்துப் பாடபேதங்களை வெளியிடக்கருதினேன். இங்ஙனம் வெளியிடுவதில், சுத்தபாடங்கள் சிறிது விளக்கப்பட்டும் பொருட்சிறப்பிலொத்த பாடங்கள் குறிப்பின்றிக் காட்டப்பட்டும் உள்ளன. என்னறிவைக்கொண்டு சுத்தமென்று கருதி எழுதப்படுவனவும், தவறியிருக்கக்கூடும். அவற்றை அறிஞர் ஆராய்ந்து குற்றங்களைந்து கொள்ளக் கடவர்.

## க. கடவுள் வாழ்த்து.

முதற்பாட்டு—(உமாபதிதுதி)—"பூமிசையோன் றொழில்காட்ட" என்பது "பூமிசையோன் சடங்கியற்ற" என உள்ளது. தொழில்காட்ட என்பது, உய்த்துணர்வாய்ச் சடங்கென்னும் பொருடரக் கூடுமாயினும் சடங்கியற்ற என்பது குறித்தபொருளை நேரே விளக்கிநிற்றல் காணலாம்.

2—(ஷை) 'அண்டங்காக்கும்' என்பது 'அண்டகூடத்து' என்று காணப்படுகிறது.

எ. (சூரியன்றுதி) 'பேராழியுலகனைத்தும் பிறங்கவளரிருணீங்க' என்பது—பேராழியுலகனைத்தும் பிறந்தகலியிருணீங்க' என்றுள்ளது. பின்வரும் அ-ம் பாடலிற் "பரந்தகலியிருணீங்க' எனவருவதோடு, இப்பாடம் பொருத்தம் பெற்றுநிற்றல் காண்க.

கஉ. (முருகவேள்துதி) "ஒரிரண்டு திருக்குலமு நிலைபெறவந்தொருகுடைக்கீழ்க் கடலுந் திக்கு—மீரிரண்டு படைத்துடைய விரவிகுலோத்தமன்" என்னும் பாட்டில், 'திக்கு—மீரிரண்டுபடைத்துடைய' என்பது 'திக்கோரீரண்டும் படைத்துடைய' என்றுள்ளது.

எட்டுத்திக்கும் படைத்துடைய என்னும் பொருளில் 'திக்குமீரிரண்டு படைத்துடைய' என்வருதல் பொருத்தமின்மையின், முன்னையபாடமே சிறப்புடைத்து.

க0. (கணபதிதுதி) "அனைத்துலகுங் கவித்ததெனக் கவித்துநிற்கு—மருட்கவிகை" என்பது, "அனைத்துலகுந் தனதென்னக் கவித்துநிற்கும்" என்றுள்ளது. கவித்ததெனக்கவித்து நிற்கும் என்பதினும் இப்பாடம் பொருட்சிறப்புடைத்து.

கஙு. பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப மிகவுயரத் திருப்ப ளென்று
நாமாதுங் கலைமாது மென்னச் சென்னி
நாவகத்து ளிருப்பாளை நவிலு வாமே.

என்னும் நாமகள் துதிப்பாடல்—

பூமாதுஞ் சயமாதும் பொலிந்து வாழ்ந்து
புயத்திருப்பத் தனித்துயரத் திருப்பே மென்று
நாமாது கருதினள்போ லுயர்ந்து சென்னி
நாவகத்து ளிருப்பாளை நவிற்றுவாமே.

எனக்காணப்படுகின்றது. முன்னைய பாடத்தில் "மிகவுயரத்திருப்பளென்று" என்பதற்கு ஏற்ற வினைமுடிவின்மையோடு, "நாமாதுங் கலைமாதுமென்ன... இருப்பாளை" என்பதற்குப் பொருளுங் காணப்படாமையால், "பூமாதுஞ் சயமாதும் (அபயனது) புயத்திருத்தலால், நா மகள், அவரிருப்பிற்கும் மேம்பட்ட இடத்திருப்பேமென்று நினைத்தவள்போல், சென்னிநாவகத்துளிருப்பவளை" எனப் பொருட்சிறப்புடைய பின்னையதே சுத்தபாடமாதல் தெளிக.

அடுத்த கச-ம் பாட்டில், "எண்மடங்கு புகழ்மடந்தைநல்லன்" என்பது "எண்மடங்கு புகழ்மடங்கா வலவனெங்கோன்" எனவும், "மகிழ்ந்த பிரானபயன்மிகவாழ்கவென்றே" எனவும் காணப்படுகின்றன.

கரு-வது (உமையவள் துதி) "செய்யதிரு மேனியொரு பாதிகரிதாகத் தெய்வமுத லுயகனை யெய்தசிலை மாரன்—கையின்மலர் பாதமலர்மீதுமணு காநங் கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்

பாம்" என்னும் பாட்டில், "மாரன் கையின் மலர் பாதமலர் மீது மனுகா" என்பது "கையின்மலர் பாதமலர் மீதணிய நல்கும்" எனக் காணப்படுகிறது. சிவபிரான் திருமேனியையும் ஒருபாதி கருகும் படி யெய்த மன்மதன், தன்கையிலுள்ள மலராகிய அம்புகளை உமையவள்பாற் செலுத்த வலியற்று, அவள் திருவடிகளில் அர்ச்சிக்கும்படி செய்யுங் கன்னி" என இப்பாடத்தில் முன்னையதினுஞ் ஒரு சிறந்தபொருள் புலப்படுதல் உய்த்துணர்க. "கன்னிதன் மலர்க் கழல்கள் என்பது—கன்னிகமலக்கழல்கள்—என்றுள்ளது. இது முன்னையதினும் ஓசை நயமுடையதாம்.

கஅ. (சத்தமாதர் துதி) 'கேழன் மேழிகலே' யென்பது 'கேழுன் மேழிகளிறு' எனக்காணப்படுகிறது.

உ0. (வாழி) 'தலமுதலுள மனுவளர்கவே' என்பது 'தலமுழுதினு மனுவளர்கவே' என்றுள்ளது.

## உ. கடைதிறப்பு.

க.—'துடியளவளவெனு நுண்ணிடை' 'துடியளவளவெனி நுனுகிடை' எனவும்,

ரு.—'விடுமினென்ற முனி வெகுளி' என்பது 'விடுமினென்ற மிகு வெகுளி' எனவும்,

க0.—'இல்லாத வவர்பெற்ற பொருள்போல்' என்பது; 'இல்லாத வன்பெற்ற பொருள்போல்' எனவும்,

கூ.—'இரவுகந்தருளு கனவினில்' என்பது—'இரவுதந்தருளு கனவினில்' எனவும், காணப்படுகின்றன. இவையெல்லாம் ஓசைநயமும் பொருட்பொருத்தமுமுடையவாதல் காண்க.

அடியிற்கண்ட பாடல்கள் இவ்வேட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன.

கச. "நின்னிற்பிரி யலமென்றவர் பிரியும்பிழை கருதி
நினையாதவை யெல்லாமட நெஞ்சத்தொடு நினையா
நன்னித்தில மிருகுக்கும வரையிற்பட நடுவே
நச்சுக்கடல் பவளம்பட நகுவீர்கடை திறமின்."

௩௭. களிவருங் கொழுநர் புயமுடன் றழுவி
யெதிர்விழுந்தற மணந்திடுந்
தெளிவருங்கலவி புலவிபோலமகிழ்
தெய்வமாதர்கடை திறமினோ.

௩௮. கண்போ லிருக்குங் காதலரைக்
காணு தொழியிற் கண்டதெலாம்
புண்போ லிருக்கு மடநல்லீர்
புனைபொற் கபாடந் திறமினோ.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

---

# புத்தகக் குறிப்பு.

மயூரகிரிக்கோவை :— பாண்டிநாட்டில், முருகக் கடவுளது க்ஷேத்திரங்களுள் ஒன்றான குன்றக்குடி எனவழங்கும் மயூரகிரியை விஷயமாகக்கொண்ட கோவைநூலொன்று சமீபத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூலியற்றியவர்—சேதுபதிகள் வாயிற்பெரும்புலவர்களில் ஒருவரான சர்க்கரைப்புலவர் குமாரர் சாந்துப்புலவர் என்னும் புலவர்சிகாமணியாவர். இக்கோவையின் சொன்னயம் பொருணயங்கள் அறிஞர்கள் ஆராய்ந்து சுவைத்தற்குரியனவாம். இக்கோவைப்பாடல் பெரும்பாலவும் அரிதுணர்பொருளவாயினும், நுணுகியாராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் ஆனந்தம்பயக்கவல்லன. இந்நூலில், இற்றைக்கு ௧௦௦-வருஷங்கட்குமுன் விளங்கிய பிரபுவும், புலவர்க்குப் பரமோபகாரியுமாயிருந்த, மருதுபாண்டியரது பெருங்குணங்கள் ஆண்டாண்டுப் புகழப்பட்டிருக்கின்றன. இத்தகைய சிறந்தநூலை, இதுபாடிய புலவரின் வழித்தோன்றலும், இப்போது மன்னார்குடி காலேஜ் தமிழ்ப்பண்டிதராயுமுள்ள ஸ்ரீ-சர்க்கரை-இராமசாமிப்புலவரவர்கள் ஆராய்ந்துபதிப்பித்துத் தம் முன்னோர்புகழைப்பரப்பியிருக்கின்றனர். இவர், இக்கோவையின் பொருளைத் தாமே பலகாற் சிந்தித்துணர்ந்தும் நல்லறிஞர்பலரை உசாவியறிந்தும் மிக்க

உழைப்பெடுத்திருக்கின்றனர். இவ்விஷயம், இவர் இந்நூலுடன் சேர்த்துப்பதிப்பித்திருக்கும் அரும்பத உரையாலும் பிறவற்றாலும் நன்கு தெரியவருகின்றது. இந்நூலை, இச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீ-சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயரவர்கள் முழுதும் பார்வையிட்டுள்ளார்கள். அன்றியும், இந்நூலியற்றிய சாந்துப்புலவர் வரலாற்றை, அவர் வழியினராகிய இப்பதிப்பாளர் பெரிதும் ஆராய்ச்சிகாட்டி எழுதியிருப்பது புகழத்தக்கதாம். இவ்வரலாறு, செந்தமிழ் வாயிலாகவும் முன்பு வெளிவந்துளது. இங்ஙனம், மறைந்துகிடந்த அரியதொருநூலை, நன்காராய்ந்து வெளியிட்டிருக்கும் புலவரவர்கள், தம்குலப்பெருமைமட்டுமேயன்றி, பொதுவிற் றமிழ்ப்பெருமையையும் ஒருவாறு விளங்கவைத்தனரென்றே சொல்லலாம். இப்புத்தகத்தின் விலை ரூ 1. வேண்டியோர் முன்கூறிய புலவரவர்கள் விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்க.

குசேலவெண்பா:—ஸ்ரீ குசேலமுனிவருடைய வைபவம் நம்மவரெல்லாம் படித்துங் கேட்டுமுணர்ந்ததே. இச்சரித்திரத்தை முன்னோர்கள் மிகவழகாக விருத்தத்தாற்பாடி வெளியிட்டிருக்கின்றார்கள். இப்போது, அதனை வெண்பாயாப்பில், ஸ்ரீமத்-நா. சேதுராம ஐயர் என்பவர்கள் பாடி வெளியிட்டிருக்கின்றார்கள். இவர்கள்வாக்குப் பெரும்பாலும் நன்கமைந்து படிப்போர்க்கு இன்பந்தரக்கூடியதாகவேயுள்ளது. இதன் பாடற்றொகை சஉஉ-ஆகும்.

பத்திராசிரியர் குறிப்பு:—இப்பகுதி முதலாக, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாக்களில், முதலதாகிய விக்கிரமசோழனுலாவை பதிப்பிக்கத்தொடங்கியிருக்கிறேன். இவ்வுலாவின் அருமைபெருமைகளை, இதனைப்படிப்போர் நன்கு தெரிந்துகொள்வர். ஆயினும், இவ்வுலாவினிறுதியில், இதற்கோர் குறிப்புரையெழுதி, விளங்காத இடங்களைக்கூடியவரை விளக்கவுமுயல்வேன். இவ்வுலாவையடுத்து, கூத்தர்பாடிய குலோத்துங்கனுலா இராசராசனுலாக்களையும் பதிப்பிக்கக்கருதியுள்ளேன். ப—ர்.